கலா நிலயம்.

V7 No. 15 12.4.1934.

M211,N28KN
N34.1.15
199165

KALANILAYAM

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 வரு ஏப்ரல் மீ 12உ [No. 15

## பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 225
2. தமிழ்ப் பாடம்
   வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 227
3. கம்பராமாயணம்—(கட்புப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A.B.L. 229
4. அக்பர், (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
   E. F. தணிகாசல முதலியார் B.A.B.L. 231
5. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 5-ம், தசகம்)
   K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 232
6. தமிழ் வேதக் கடலமுதம்
   உபய வேதாந்த வித்வான ப்ரதிவாதி பயங்கரம்
   ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் 234
7. மதுரைக் கோவை (இரவிற் குறி)
   S. வையாபுரிப் பிள்ளை. B.A.B.L. 235
8. சூளாமணி (நகரச் சருக்கம்) - வித்துவான்
   T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, B.A B L. 227
9. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
   (விநராதா நாமனவி)
   P. B. ஸ்ரீநிவாசாச்சாரியர் B.A. 239
10. வர்த்தமானம் 240


## கலா நிலயம்

### கல்சரும் கவிதையும் 4.

மொழியின தமைப்பு, வருணங்களின் சேர்க்கை உருவத்தின் திருத்தம், தெய்வ ஆராதனை தேச ஆசாரம் அரசியல் இல்லறம் துறவுநெறி போன்றவைகளுக்குஇயன்றவாய்ப் புரியும்செயல்கள், இவையெலாம் கவிதைக்கு முதற்கருவி துணைக்கருவி எனும் இருவிதகருவிகளுமாய் நிற்குந்தன்மையை முன்னர்க் கூறினேம். காரிய வாகுபெயர்களாய் இவைகளையே கவிதையென்று அழைப்பினும் அமையும். எனினும், சொற்களை யாப்பிற்குரியஉறுப்புக்களுடன் வரிசைப் படுத்திஓசையுறச்சேர்க்கின்றவொரு சக்தியையே கவிதையெனச்சிறப்பாகக்குறிப்பது கொள்கை. அச்சக்தி, பிறவகைச் சக்திகளுக்கெல்லாம் ஒருதனிப் பேரரசு போன்று மன்பதைத்தொகுதியின் மனமெனும் விதானநீழலில் மானுட இயற்கையாம் அரியணைமீதுவீற்றிருக்கின்றது. நமது உள்ளத்தின் நிலையைச்சார்ந்த உணர்வுகளை, நிறங்கொண்டு படமென்றும் உருக்கொண்டு சிலையென்றும் அவயவ அசைவினைக்கொண்டு காட்டியமென்றும் ஒலிகொண்டு இசையென்றும்,புறத்தே தோற்றுவிக்கலாமாயினும், உணர்வினை ஊற்ற பொருளைக் காட்டும்திறமை மொழிகளுக்கு இருக்குமளவு மற்றவைகளுக்கு இல்லை. நுண்ணிதின் நுண்ணிதாய் நுழைந்து உணர்வுடன் இணங்குமோர்மென்மையும் வன்மையும் மொழிகளுக்கேமிகுதியும்உள. தம்மைக் கற்பிக்கின்ற அச்சக்தி நுனிக்கும் அளவு மொழிகள் வணங்கும்; செலுத்துமளவு செல்லும். கவிதாசக்தி நினைத்தபடியெல்[illegible] சேரவல்லன; பிரித்தபடி யெல்ல[illegible]லன. ஆ[illegible]ற்றான், கவிதாசக்தியின் [illegible]கிழ்ச்சி,கலைகளுள் கா[illegible]கலையின் மாட்டே தோன்றக்காண்கின்றோம். இதுவெனெனில், மனோபாவத்தினின்று பிறக்கின்ற மொழிகள் எண்ணங்களுடன் நேராக உறவுகொள்வதற் கியல்வதாக, மற்றக் கலைகளுக்குரிய தூரிகை வர்ணம் சிற்றுளி கல் முதலிய கருவிகளும் அவைகளைப் பயிலும் கல்வியும் தம்முள் ஒன்றடன் ஒன்று சார்புடைத்தாய், கலைஞனது உணர்விற்கும் அவ்வுணர்வினைத் தோற்றுவிக்கும் செயலிற்கும் இடையேகிடந்து தொடர்பினைத்தளர்வுறச்செய்கின்றன. ஆதலால், கவிதையானது தன்னைப் பூரணமாய்த் தெரிவித்துக்கொள்ள இயல்வதாகிய காவியக்கலையினிடத்தே பெரிதும் உறவுபாராட்டி வழங்கிவரக் காண்கின்றோம்.

இத்தருணத்தில் ஒரு கேள்வி எழலாம். மனோபாவத்தின் முதன்மையாய கருவி மொழிகள் தாம் எனினும் அவை சீர் தளை தொடை அடி முதலிய உறுப்புக்களுடன் செய்யுள்களாக யாக்கப்பெற்றால்தான் கவிதாசக்திக்கு ஏற்றனவாகுமோ, அல்லது சொல்லுமெழுத்தும் பிறழாமல் உரைநடையில் பயின்றுவரு மொழிகளால் கவிதையின் செயல்காட்ட இயலாதோ என்று ஐயுறவெய்துவோர்க்கு நாம் ஒன்று உரைத்தற்குளது. கவிதையின் தத்துவத்தைக் கருதுங்கால் செய்யுள் அடியென்றும் வசனநடையென்றும் ஒரு பேதமில்லை. எனினும், ஒரு எண்ணத்தை நாம் உரைக்கப்புகுங்கால், அவ்வெண்ணத்திற்கும் அதைஉரைப்பதற் கமைகின்ற சொற்களின் ஓசைக்கும் மிகவும் நெருங்கிய சம்பந்தம் உளது இதுவுமன்றி,எண்ணத்திற்கும் ஓசைக்கும் உள்ள அவ்வுறவானது அவையிரண்டினாலும் குறிக்கப்படும்பொருளையுஞ் சார்ந்துளது ஒரு

அப்பொருளால் விளைந்த எண்ணம், அவ் மொழியும் ஓசை ஆகிய இம்மூன்றிற் குமுள்ள உறவின் வான்முறையை உய்த்துணர்வது, அப்பொருளைப்பற்றி ஒன்றன்பின் ஒன்றாய் எழுகின்ற எண்ணங்களுக்கு இடையே தொடர்கின்றமுறையை உணர்வதோடு இணங்கியிருப்பதைக் காண்கின்றோம். ஆதலாற்றான், கவிகளாயினோர் தம்சொற்களின் ஒலியைப் பெரும்பாலும் மோனை எதுகைகளாலும் மாத்திரையாலும் ஒருபடித்தா யமைக்கலாகின்றார். இவ்வொலிகளின் இசையினால் ஓசை ஊட்டப்பெற்று அடிகள் நடக்கின்றன. அவ்வோசையில்லையேல் செய்யுள் இல்லையாமென்பது மாத்திரமன்றிக் கவிதையுமே காணப்பெறவில்லை என்னவும் வேண்டும். உற்ற விடயத்தை உரைப்பதற்கு மொழிகள் எத்துணை அவசியமோ அத்துணை அவசியமாம் அவைகளை இசைபட அமைத்தலும். இல்லையேல், அம்மொழிகளால் எய்த வேண்டிய பயன் இல்லாதுபோம். இதனிற்கோருதாரணங் காட்டுவோம்.

தூதுவந்த வன்னத்தின் மொழிகேட்டுத் தன்தன தடங்களைப்பாராத் தயங்கிய தமயந்திக்கு வேறுபாடுற்றதென் றுரைக்கப்பெற்ற விதர்ப்பர்கோன் என்செய்தான். கவிதாசக்தி குறைந்த கவியாயின் புகழேந்தி, அவன் கலங்கினனென்றும்,புலம்பினனென்றும்தன் மகளைக்கண்ணுற அவள்மாட்டு விரைந்தோடினனென்றும் பலபடப் பாடியிருப்பார். ஆனால், மனோபாவமுடையவராதலால் இவரால் சிருஷ்டிக்கப்பட்டவீமராஜனும் மனோபாவமுடையவனாகஇருந்தான். அம்மகள் உற்றநோய் காதலேயதா னெனக் கருத்துட்கொண்டனன். உற்றதறிய உளம் நடுங்கினர் தோழியர். அதுகேட்ட மன்னனும் காரணகாரிய முறைப்படி உளம்நனி நடுங்கியிருத்தலேவேண்டும். எனினும் இச்செய்தியைக் கேட்டதால் விளைந்த எண்ணங்கள் முற்றிலும் அவன் பகுத்தறிவின் முறைப்படி நடந்து முடிந்துவிடவில்லை. அவன் மனோபாவம் இவ்வெண்ணங்களை வாங்கிக்கொண்டு தன்னுடைய அனுபவத்தையும் அதனோடு சேர்த்துத் தமயந்திக்கு விரைவில் சுயம்வரம் சமைக்கவேண்டுமென்ற எண்ணத்தைப் பிறப்பித்தது. அதனை நிகழ்த்தப் போகின்றான். ஆதலின், அவன் தமயந்தியின் கன்னிமாடத்தை நோக்கிச்சென்ற செய்தியைச் செப்பும் செய்யுள்

கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்[கால்
மருங்குலவ வார்முரச மார்ப்ப—நெருங்கு
புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாண் மனை.

எனவே அமைந்திருக்கின்றது. நாம்முன்சொன்ன தோன்றும் புகழேந்திப்புலவர் நூலில் வெளிப்படையாக இல்லை. தோழியர் சென்று தேவியிடம் "பொற்றொடிக்கு வேறுபாடு உண்டு" என்றார்—வேந்தனுக்கு "மற்றதனைக் கூறினள் பெற்றகொடி," என இயம்பியதை படித்து அரசன் இவ்விதவைபவங்களுடன் புறப்பட்டுவிட்டான் என்றுதெரிவிக்கின்றார் கவி. தமயந்தியின் செய்தியைக் கேள்வியுற்றதால் விதர்ப்பனுடைய மனத்தின்கண் எவ்வகை எண்ணங்கள் விளைந்தன வென்பதையும்,அவையிரண்டிற்கு முள்ள உறவையு மெதனைக்கொண்டுநாம் அறியலாகின்றோம்!இதேவிஷயத்தை, "கருமையான கூந்தலையுடைய மாதர்கள் தம் சிவப்பான கையினால் வெண்சாமரத்தில்வீசும்இளம் காற்றுப் பக்கத்தில் உலவவும்.....புக்கான்" என்னும் சொற்களால் வசனநடையில் விளம்புவதாயின், எல்லாம்நமக்கு விபரீதமாகத் தோன்றும். தன்னருமகள் நோயுற்றிருக்கின்றனள் என்றபின் விரைந்தங்கு ஏக வேண்டிய தந்தை இவ்வாறு உலாப்போவானாயின் அவனை என்னென்று வெறுப்பது என்னும் நினைவே நம்பால் எழும். அந்நினை வெழாமற் காத்து, விடயத்திற்கும் அதனை உட்கொண்ட எண்ணத்திற்குமுள்ள வுறவின் மெய்ம்மையை, இச்செய்யுளின் மொழிகள் இசைந்துடன் நடக்கின்றநேர்மையாலும், மெல்லின இடையின எழுத்துக்களின் மிகுதியாலும், தளையின் அமைதியாலும் பிறக்கின்ற ஓசையே காட்டுகின்றது. இன்னபடி அமையவில்லையாயின் விதர்ப்பனதுணர்வு கவியின் மூலமாய்க் காட்டப்பெற்ற தாகாது. காட்ட முயன்ற மொழிகளுமே பழுதடைந்துபோகும். ஆதலாற்றான் ஒரு கவியினது முழுக்கருத்தையும் அதன் பயனோடு பெறவேண்டுமாயின் அதனிற்பயின்றுள்ள சொற்களை அவ்வுருவத்திலேயே அவ்வமைப்பிலேயே பருகுதல் வேண்டும். உப்பு புளி மிளகாய் முதலியன சேர்ந்து ஆவது 'இரஸம்' ஆனாலும், இத்துணை உப்பு இத்துணைப் புளி இத்துணை மிளகாய் என்று தனித் தனி எடுத்துத்தின்று வெந்நீரை உட்கொள்வதால் இரசத்தைப் பருகியவர்க ளாகமாட்டோம்.

கவிதாசக்தியின் தன்மையைக்கண்டோம்; அச்சக்தி தன்னைத் தெரிவித்துக்கொள்வதற்கு இயன்ற மொழிகள் அமையவல்ல ஆற்றலையுங்கண்டோம். இன்னபடி ஆக்கப்பெற்ற காவியம் பெரும்பாலும் ஒரு கதையை இயம்புகின்றகருமத்தைக்கொண்டதாயிருக்கின்றது. எனினும் காவியம்வேறு, வெறும்கதை வேறு. காவியமானது,நிரந்தரமாய மெய்ம்மையின் முறைப்படி உயிர் வாழ்க்கையினது முழுமையைத்தோற்றுவித்துத்தருகின்றவோர் பிரதிபிம்பமாம். வெறும்கதை யொன்று நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து வைத்திருக்கும் அட்டவணையேயன்றிவேறன்று.காலதேசவர்த்தமான பேதங்களும், காரணகாரிய இயக்கமு மல்லாமல் அந்நிகழ்ச்சிகள் ஒன்றற்கொன்று வேறெவ்விதச் சம்பந்தமும் பெற்றிருக்கமாட்டா. கவிதையோ, மானுட இயற்கையின் மாறுத உருவத்திற் கிணங்கியபடி செயல்களைச் சிருஷ்டிப்பதாம். கதையின் நிகழ்ச்சிகள் ஒருவித சந்தர்ப்பத்திற்கே ஏற்றனவாகுமாகையால் அவை குறையுடையன. ஒருதரம் நிகழ்ந்தவாறே அவை மறுபடி நிகழா. கவிதையோ, உலகமே எந்நாளுளது எவ்வளவுளது, அந்நாள்காறும் அவ்வளவு பரந்ததாயும் நிலைநிற்கவல்லது. மானுட இயற்கையில் இருக்கக்கூடிய வித்தியாசங்கள் அத்தனையாலும் எழுகின்றசூழ்ச்சிக்கும் செயலிற்கும் உரிய வித்தானது தன்னுள் தங்கப் பெற்றது கவிதை. கவிதையால் விளக்கமுறாத கதையின் பொருளும் அழகும் பயனும் காலம் செல்லச் செல்லத் தேய்ந்து அழிந்துபோம். கவிதையின் மேன்மையோ காலத்திற்குக்காலம் புதியபுதிய துறைகளில் தன் வாய்மையை அதிசயமுறத் தோற்றுவிக்கும்.

இராமாயணம் பாரதம் முதலியகதைகள் இருக்கின்றன. திருவிளையாடற் புராணக் கதைகள் உள. கந்தபுராணத்திலும் பெரியபுராணம் அனைய மற்றப் புராணங்களிலும் பற்பல கதைகளும் நிகழ்ச்சிகளும் உரைக்கப் பெற்[illegible] நிகழ்ச்சிகளை மட்டுமே எடுத்[illegible]ப்போமாயின் [illegible]களைச் செப்

199165



பிய புலவர்கள் கருதிய பயனை நாம் பெற்றவர்களாகமாட்டோம். விபரீதப் பொருள்படுத்தி வீண்வாதம் செய்வதற்கே அவை அனைத்தும்உதவும். இக்கதைகளை ஆக்கித்தந்த கவிதாசக்தியுடன் சேர்த்தே நாம்அவைகளைக் கற்கவேண்டும், அவைகளில் நாம் பயிலவேண்டும். பள்ளிக்கூடச் சிறுவர்க்கு இராமாயண பாரத கதைகளைஎடுத்து எழுதித்தருகின்ற அந்த"மேலெழுந்த நோக்காகப் படிக்கவேண்டிய புஸ்தகங்களால்" (Non-detailedstudybooks) வருகின்றஆபத்தை அறியாதுகெடுகின்றோம். இராமசரிதையைத்தெரிந்து கொள்வதெனின் முதல்முதலதனை வால்மீகர் கம்பர் போன்ற புலவர் வாய்நின்று அவர்மொழிகளாலேயே, அம்மொழிகளைக்கொண்டு அவர் இசைத்த ஓசையுடனேயே கேட்கவேண்டும். இக் கதைகளின் கவிதையெல்லாம் கழித்துவிட்டுக் கூறுவோர் எழுதுவோர் அனைவரும் நமது நல்வாழ்விற்குக் கூற்றுவர் ஆகின்றனர். கவிதாசக்தியின் சிறப்பெல்லாம் பெற்றிராதவர் அக்கதைகளின் நிகழ்ச்சிகளைப் பிய்த்தெறிய இயன்றவரேயல்லது,அவைதம் வாய்மையையும் அழகையும் விளம்புதற்கொத்த வாய் அவர்களுக்கேது. காவியக் கதைகளின் சுருக்கமென்று எழுதப்பெற்றுள புஸ்தகங்கள் கறையானகளையே நிகர்க்கும் - கவிதையெல்லாம் அரித்துவிட்டுக் கதையை உதிர்த்துவிடுகின்றன. காவியங்களில் வருகின்ற கதைநிகழ்ச்சியைமாத்திரங் கூறுவது அதன் அழகை அழித்து மழுங்கச் செய்வதாம். அதனால் உலகிற்குள்ள நற்பயனைக் கொன்று தொலைப்பதாம் இருக்கின்றஅழகைக் கெடுக்கும்வெறுங்கதை; இல்லாத அழகையும் கவிதை கொடுக்கும்.

# தமிழ்ப்பாடம் 115.

## வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[214-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

எதிர்கொண்டவர்களுடன் ஏகிய கண்ணபிரான், துரியோதனனது மாளிகைக்குச் செல்லாமல், விதுரனது மாளிகைக்குள் சென்று யாவரையும் விடைதந்து அனுப்பிவிட்டு, ஆங்கோர் சிம்மாதனத்தில் வீற்றிருக்கலாயினன். இவ்விஷயமடங்கிய இருசெய்யுள்கள் விடலாயின. பிறகு

இருந்து வந்தரு ளிறைவனை யிறைஞ்சின னிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதுரன். 41

திருமால், தன்னகம் எய்தினனென விதுரன் மகிழ்ச்சியுற்ற தன்மையினை இதுவும், இதன்பின் வரும் நான்கு செய்யுள்களும் குறிக்கின்றன.

பதவுரை.

வந்தனை - தனக்கு வழிபாடு செய்த, அமரருக்கு - தேவர்களுக்கு, மருந்து - அமிர்தத்தை, அருளிய - கடைந்து எடுத்து அருளின, மாயோன் - திருமால், விருந்து-தன் மனைக்கு விருந்தாக, வந்தனன் - வருவதற்குத் திருவுளம் கொண்டனனே, என்று-என்று, உளம் உருகிய - மனம் உருகிய, விதுரன் - விதுரனவன்,

உவந்து இருந்து அருள் - உவகையோடு இருந்து அருளிய, இறைவனை - எம்பெருமானை, இறைஞ்சினன் - வணங்கினன். இறைஞ்சி - வணங்கியவுடன், பெரும் - பெரும், துவம்தனை - இரண்டென்னும் தன்மையவாய, பிறப்பையும் இறப்பையும் - பிறப்பு இறப்பு என்பனவற்றை, பிரித்தான்-நீக்கிவிட்டான்.

குறிப்பு:—இருந்துவந், பெருந்துவந், மருந்துவந், விருந்துவந் என நான்கடிகளிலும் முதல் எழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்கள் சில ஒன்றேயாகத் தொடர்ந்து வருவதால் இது திரிபு என்னும் சொல் அணி(வால்யூம்6,512பக்கம்). துவம்என்பது இரண்டு என்று பொருள்படும் த்வம் என்னும் வடமொழியின் சிதைவு.

---

கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்தகோ கனதக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணிணை களியாத்
தோடு கொண்டதார்விதுரனிப் பிறப்பையுந் தொலைத்
தான்
வீடுகண்டவர்க்கியம்பவும்வேண்டுமோவேண்டா. 42.

பதவுரை.

அலர்ந்த - மலர்ந்த, கோகனதம் - தாமரையின், காடு - காட்டினை, கண்டு என - (வண்டு) கண்டது போல; தோடு-இதழ்களை, கொண்ட - கொண்டிருக்கின்ற, தார் - மாலையை அணிந்திருக்கிற, விதுரன் - விதுரனவன், கோடு - சங்கினை, கொண்ட-ஏந்திய, கை - கையையுடைய, குரிசிலை - கண்ணபிரானை, கண்டு - பார்த்து, தன் - தன்னுடைய, கண் இணை - இரண்டு கண்களும், களிபா - களிப்படைந்து, இ பிறப்பையும் - இந்தப் பிறவியையும், தொலைத்தான்- ஒழித்துவிட்டான்.

வீடு கண்டவர்க்கு-முக்தி நிலையைக் கண்டவர்க்கு, இயம்பவும் - (இவ்வாறெல்லாம் நிகழ்வதை) சொல்லவும், வேண்டுமோ - வேண்டுமோ, வேண்டா - வேண்டுவதில்லை.

குறிப்பு:—கோடுகொண்ட, காடுகண்ட, தோடுகொண்ட, வீடுகண்ட—இவை இரண்டாம்வேற்றுமைத் தொகைகள், ஆதலால் வருமொழி முதல் வல்லினம் மிகவில்லை. கைக்குரிசில் (கையை உடைய குரிசில்) இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகை யாதலால் ஐகாரத்துடன் கூடிய ஓரெழுத் தொருமொழியான, கை என்னும் நிலைமொழிக்குப் பின் வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்தது. கோகனதக் காடுபோல் கண்ணனைக் கண்டனன் என்பது, அவன் திருமேனியில் கண்கள் அதரம் கரதலம் நாபி பாதம் ஆபவை தாமரைமலர்போன்று அலர்ந்திருப்பதைக் கருதியாம். 'கரியமால்வரைமுளரிக்காடு ஈன்றுகிடந்தாங்கு' என்று திருவரங்கக்கலம்பகத்தில்(6வது வால்யூம் 828-பக்கம்)வந்திருப்பதை நினைவிற்கொள்ளவும்.

---

உள்ளினு ளுணர்ந் துள்ளமு முருகினு னெழுந்து
துள்ளி னன்விழுந் திணையடி சூடினன் றயைத்
தள்ளி னன்மலர்த் தடக்கையாற் றத்துவ வமுதை
யள்ளி னுனெனக் கண்களாலருந்தினனளியோன் 43

பதவுரை.

அளியோன்-அருளுக்குப் பாத்திரமான விதுரன், உள்ளினன்-திருமாலைத் தன்மனையில் எய்தப்பெற்ற பாக்கியத்தைச் சிந்தித்தான்; உணர்ந்து - சிந்தித்துணர்ந்து, உள்ளமும் உருகினன்-உள்ளமும் உருகினன்; எழுந்து துள்ளினன் - எழுந்து குதித்தான்; விழுந்து-விழுந்து, இணையடி-இரண்டுபாதங்களையும், சூடினன்-தன்தலைமீது சூடிக்கொண்டான்; துயரை-துன்பங்களை யெல்லாம், தள்ளினன் - தள்ளிவிட்டான்; மலர்-தன் தாமரைமலர்போன்ற, தட-பெரிய, கையால் - கைகளால், தத்துவ அமுதை - தத்துவமாகிய அமிர்தத்தை, அள்ளினன் என-அள்ளினன்போல், கண்களால்-தன் இருகண்களாலும், அருந்தினன் - பருகினன்.

குறிப்பு:—அடிசூடினன், இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலால் வலி மிகவில்லை.

முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவம் செய்ததிச் சிறுகுடி லென்றான் 44

தன்மனை வந்த கண்ணனுக்கு முகமன் கூறுகின்றான் விதுரன்.

பதவுரை.

கருதி - நினைவோடு, நீ- திருமாலாகியநீ, எய்தற்கு-வந்து தங்குவதற்கு ஏற்றதாய், என்ன - என்ன, மா-பெரிய, தவம்-தவத்தை, இச்சிறுகுடில்-இந்த எனது சிறிய வீடானது, செய்தது - செய்துவிட்டது, (ஒன்றுமில்லையே, ஆதலால்)

முன்னமே - முன்னே, துயின்று அருளிய - நீ நித்திரை செய்தருளிய, முது - பழமையான, பயஸ் உததியோ-பாற்கடல்என்றுமயங்கினையோ,(அல்லது) பல் நக அதிபன் பாயலோ - பற்களுடைய பாம்புகளுக்குத் தலைவனாகிய ஆதிசேஷனும் படுக்கைஎன்று மயங்கினையோ, பச்சை - பச்சையாகிய, ஆல் இலையோ - ஆல இலையென்று மயங்கினையோ, (அல்லது) சொன்ன - புகழ்ந்து சொல்லப்படுகின்ற, நால் வகை - நான்குவகையான, சுருதியோ - வேதமென்று எண்ணி மயங்கினையோ, (அறிகிலேனே) என்றான் - என்று துதித்தான்.

விரிவுரை:-பைந்தமிழ் இலக்கியத்தில்பொருள்வளமும்,சொல்நயமும்தலைசிறந்துவிளங்குகின்ற பலசெய்யுள்களில் இது ஒன்று. வில்லிபுத்தூராரும், அவ்விதுரனோடு தத்துவஅமுதை அள்ளி அருந்தினலன்றி, இத்தகைய முகமன்ஒன்று அவர் உள்ளத்தில் உதித்திராது. தன் மனைக்கே, கண்ணன் வந்தானெனத் திளைத்த மனத்தினால் நெகிழ்ந்துருகிப் பாய்ந்த சொற்கள் இவை. "அண்ணலே, என் மனைக்கு வரவேண்டும் என்ற நினைவோடு 'கருதியே நீ எய்தினாய்' என்ன நான் எண்ணியிருப்பது எங்ஙனம். அன்னதற்கு இக்குடில் அரும்தவம் மிகப் புரிந்திருத்தல் வேண்டும். மற்று,செய்தவந்தான் எத்தனையோ செய்திருந்தாலும்,நீ வந்தருள அவை போதுமோ. ஆதலால் நீ ஏதோ ஒருவாறு மயங்கியே இங்கு வந்திருத்தல் வேண்டும். தூங்கினான் ஒருவன் சிறிது கண்விழித்துப் பாயலை விட்டு அகன்றுசென்று மீண்டும் வந்து துயிலப்புகுங்கால் அத் தூக்கமயக்கத்தினால் முன் துயின்ற பாயலீதென்று ஓர்ந்துகொள்ளாமல் வேறு ஓர் படுக்கையில்,தனதென்றே நினைத்துப் படுக்கப்புகுவதேபோல், பாற்கடலிலும் ஆதிசேடனிலும் ஆலிலையிலும் அருமறை நான்கிலும் துயின்று இருந்த நீ சிறிது எழுந்து ஏதோ கருமங்கருதி இவ்வுலகினில் வந்து என் மனையை அவைகளில் ஒன்றென மயங்கிப் புகுந்தனை போலும். தவம் ஏதேனும் என் சிறு குடில் செய்தது உண்டாயின் அது மயக்கத்தால் நீ வருவதற்குப்பற்றினும் பற்றலாகுமே யன்றி, விதுரன் மனை யிது இதன்கண் யான் எழுந்தருளல்வேண்டும்,எனக்கருதி நீவருவதற்கோ பற்றாது காண்" என்னும் பொருளால் இச்செய்யுள் சிறக்கின்றது. இப்பொருள் கூறுங்கால் முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ, முதலியன மயக்கஅணியின்பாற்படும் (மயக்க அணியினது இலக்கணத்தை ஆறாவது வால்யூம் 558-வது பக்கத்திலும், ஐந்தாவது வால்யூம் 545-வது பக்கத்திலும் காணலாம்.) விதுரனது சொல்லளவிலே ஐயவணியாக நிற்கின்ற இது, அவ்விதுரன் கண்ணனுடைய மனப்பான்மையாகக் கற்பிக்குங் கருத்து மயக்க அணி போன்று அமைந்திருக்கின்றது.

மும்மை யாகிய புவனங்கண் முழுதையு மருந்து
மெம்மை யாளுடை நாயகன் விருந்தினுக்கிசைந்தா
னம்ம வென்றன னாறுநா றாயிர மடையர்
தம்மைநோக்கினனவர்களும்விரைவுடன்சமைத்தார்

பதவுரை. 45

மும்மை ஆகிய - (மேல் கீழ் நடு என்னும்) மூன்று வகையாகிய, புவனங்கள் - உலகங்கள், முழுதையும்-எல்லாவற்றையும், அருந்தும் - (பிரளய காலத்தில்) உண்டருளியவனும்; எம்மை - நம்மனோரை, ஆள் உடைய-அடிமையாகக் கொண்டிருக்கின்ற, நாயகன்-தலைவனும் ஆன திருமால், விருந்தினுக்கு - (என்) மனையில் விருந்துண்ண, இசைந்தனன் - உடன்பட்டான், அம்ம - அப்பப்பா, (யான் என்செய்வேன்) என்றனன் - என்று தனக்குள் சொல்லிக்கொண்டவனாய் விதுரன், ஆறுநூறு ஆயிரம்-ஆறுலக்ஷம், மடையர்தம்மை - சமையற்காரரை, நோக்கினன் - பார்த்தான், அவர்களும்-அச்சமையற்காரர்களும் அக்குறிப்பைத் தெரிந்துகொண்டு,) விரைவுடன் - வேகமாக, சமைத்தார் - சமைத்தனர்.

விரிவுரை:-"வாராவிருந்தாகியஇவன் பாரும்நீரும் முன் பசித்தான்போல் உண்டவனல்லனோ. இக்குவலயமே அவனுக்குப்பற்றவும் போதவில்லையே. யானவனுக்கு எங்ஙனம் விருந்தியற்றிக் கரைகாணப் போகின்றேன்" என விந்தையும் கவலையும் கலந்த மனத்தினன்போல் விதுரன் மகிழ்வுற்ற நிலையை 'அம்ம' என்னும் இடைச்சொல் குறிக்கின்றது.

## இலக்கணம்

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளில் எல்லாம் வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்தே தீரும் என்று கூறினோம். ஆயினும் ஒரு சிறு விடயம் இங்கு நினைவில் இருத்தல் வேண்டும். தமிழ்ச் சொற்களுக்கு உரிய புணர்ச்சி விதிகளே இவை ஆதலின், வடமொழிகளுக்கிடையே இவைகளைச் சார்த்தலாகாது. இவ்விதிகளுக்கு மட்டுமே யன்றி மற்றெல்லா விதிகளுக்கும் இது ஒக்கும்.



புத்திர + சோகம் = (புத்திரனை யிழந்த சோகம்) = புத்திரசோகம்.

பூ + தானம் = (பூவை(பூமியை) கொடுக்கின்ற தானம்) = பூதானம்.

நர + சோரம் = (நரரைத் திருடுகின்ற சோரம்) நரசோரம்.

இவ்வுதாரணங்களில், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகளிலும் வல்லினம் மிகவில்லை. இவைகளில், நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டும் வடமொழிகளா யிருக்கின்றன. அவ்வாறின்றி அவ்விரண்டில் ஒன்று தமிழ்மொழியாயமையுமாயின், வலி மிகும்—

புத்திர + பேறு = புத்திரப்பேறு, (புத்திரனைப் பெறும் பேறு). வருமொழி தமிழாக வலி மிக்கது.

முடி + சிரம் = முடிச்சிரம் (முடியைத் தாங்கியுள்ள சிரம்). நிலைமொழி தமிழாக வலிமிக்கது.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[216-வது பக்கத் தொடர்ச்சி]

அறிவுந் தவமு மப்புறந் தெரியும்.

புவியெலா மொருங்கு செய்த புண்ணியம் அனைத்தும்
புக்கு மானுடம் வெல்லுமா றோ ருருக்கொண்டு
வந்ததென்னவந்தவவ்வீரரை நனித்துநோக்கிமதியுற
மகிழ்ந்துநின்ற சுக்கிரீவன்,
எனநினைந்தினையவெண்ணியிவர்கின்றகாதலோதக்
கனைகடற்கரைநின்றேறாக்கண்ணிணைகளிப்பநோக்கி
அனகனைக்குறுகினனவ்வண்ணலுமருத்திகூரப்
புனைமலர்த்தடக்கை நீட்டிப்போந்தினி திருத்தியென்
[றான்.

[என்றுமதித்து, இன்னவைகளைச்சிந்தித்துமேன்மேல் பெருகுகின்றஆசை என்னும்நீரையுடைய கடலிலிருந்து கரையேறமாட்டாமல், தன் இருகண்களும் களிக்கும்படி பார்த்துக்குற்றமற்றவனாகியஇராமனைநெருங்கினான். அப்பெருமகனும் அன்புமிக,அழகிய மலர்போன்ற தன் கையை நீட்டி, "இங்கு வந்து இனிதுஇருப்பாய்"என்றான்.]

பதின்மூன் றாண்டுகளுக்குமுன் தன்னைத் தரிசிக்க வந்த குகனை நோக்கி "இருத்தி யீண்டு" என்றவாறே இராமன் இவ்விடத்தில், "போந்தினி திருத்தி" என்னச் சுக்கிரீவனை உபசரிக்கின்றான். ஒவ்வொருவர்க்கொவ்வொன்றை பொவ்வோர் வகையில் சொல்வது வழக்கமாயிருத்தல் இயற்கையாதலின் கம்பர், தம் நாடகபாத்திரங்களின் ஒற்றுமையை இத்தகைய மிகச் சிறிய சூழ்ச்சிகளால் பெரிதுங் காப்பதுண்டு.

இராமசந்திரனும் கதிரோன் புதல்வனும் சேர்ந்த இச் செவ்வியைத்தொடர்ந்து கம்பர்மனத்தினுள் சில சிந்தனைகள் எழுகின்றன:—

தவாவலியரக்கரென்னுந்தகாவிருட்பகையைத்தள்ளிக்
குவாலறநிறுத்தற்கேற்றகாலத்தின்கூட்டமொத்தார்
அவாமுதலறுத்த சிந்தை யனகனு மரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடு முடுபதி யிரவி யொத்தார்.

[ஆசையை வேரோடு நீக்கிய மனத்தை யுடையவனும் குற்றமற்றவனும் ஆகிய இராமனும் வானரத் தலைவனான சுக்கிரீவனும், குறையாத பலமுடைய அரக்கர்என்கின்ற தகுதியற்ற இருட்டாகியபகையையொழித்து,திரண்டஅறத்தை நிலைநிறுத்துவதற்கு ஏற்றதாய் அமைந்த காலத்தின் சேர்க்கையை ஒத்தார். இன்னும், அமாவாசியைவர அப்பொழுது ஒன்றுசேரும் சந்திரசூரியர்களையும் ஒத்தார்]

அமாவாசியையில் சூரியனும் சந்திரனும் சேர்கின்றாரென்பதன்றியும்,அவ்விருவரும் சேர்ந்தால் அமாவாசியை ஆகிவிடுகின்றதுஎனக் கம்பரிங்கு எதிருறக் காட்டிய இக்கருத்தினை மனத்தில் வைத்தேபோலும் இவ்விராமன் கண்ணனுப்போந்தபோது,சாதேவன் சோதிடத்தைக் கலக்கங்கண்டு அவன் சுயோதனனது வெற்றிக்குக்கணித்தமைத்த நாளையும்பொழுதையும் பயனிலாவகை வறியதாக்கினான்.

இவர்கூட்டம், அமாவாசியை ஆவதுடன், உய்ய நினைக்கின்ற மாந்தரனைவரும் கைபருமற்காக்கவேண்டியகருத்துக்கள்வேறு ஒன்றிரண்டு உதிப்பதற் குதவியாய் நிற்கின்றது கூறுகின்றார் கம்பர்பிரான்—

கூட்டமொத் திருந்த வீரர்
குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர்
முயற்சியு மியைந்த தொத்தார்
மீட்டும்வா ளரக்க ரென்னுந்
தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு
ஞானமுங் கிடைத்த தொத்தார்

[காலத்தின் கூட்டத்தை ஒத்திருந்த அவ்வீரர்கள்—குறித்த ஓர் காரியம் நிறைவேறுவதற்கு, முன்னேசெய்து சேமித்து வைத்திருக்கின்ற தவமும்,பின்னே செய்கின்ற முயற்சியும் பொருந்தி அமைந்ததைஒத்தார். அன்றியும், கொடிய அரக்கர்களாகிய தீவினையை வேரோடு களைந்து தீர்ப்பதற்கு,கேட்டு உணர்ந்த கல்வியோடு ஞானமும் வாய்த்ததை ஒத்தார்]

அரியின் வேந்தும் இராமபிரானுஞ் சேர்கின்றனர். இச்சேர்க்கையால் விளையநின்ற பயன்கள் இருவகையன. அவ்விருவரும் தாம் தாம் இழந்துவிட்ட மனைவியைப் பெறுவது ஒன்று; மற்றையது, அரக்கரென்னுந் தீவினை வேரறநீங்கவேண்டிய நன்மை. முன்னைய பயன் இவ்விருவருக்குமட்டுமே உதவுதற் குரியது; பின்னையது உலகத்தின் நன்மையை நாட்டுதற் கேற்றது. இவ்வாறு அவரவர் நன்மைக்கு இடனாயுகிம் உலக நன்மைக்கு ஆதாரமாயும் நேர்கின்ற இவ் விராமசுக்கிரீவர் கூட்டத்தை, தனித்தனி வேறு இரண்டிரண்டு இயைகின்றநிலைமையோடு கம்பர் ஒப்பமைத்துக்கூறுகின்றார்.அவ்வுவமைகளின் அருமை ஆராயத்தகுந்தது.வாழ்வாங்கு வாழவும் வாழ்விக்கவும் விழைகின்றவர்களுக்கு இடையிடையே விளையவல்ல ஐயங்களைத் தெளிவித்து மாந்தர் மனத்தினை ஒருவழிப்படுத்தும் மாபெரும் புண்ணியத்தவர் நம் கல்வியிற் பெரிய கம்பர்.

ஒருவன் தான் குறிக்கொண்ட ஒன்றினை எய்தப் பெறுதல் எதனால்? முன் செய்த தவத்தாலோ, மற்றுப் பின் செய்யும் முயற்சியாலோ, என்னும் இவ்வகைக் கேள்விகள்விளைவதற்குரிய மனப்பயிற்சி வாய்

த்தவர் அவ்வையத்தினின் றுதெளியும்வகை யறியாரா
யின் அவர் வாழ்க்கை முழுவதும் வறிதாய் முடியும்.
கருதியவொருகருமம் கைகூடவேண்டுமாயின் முன்னே
தவம் செய்திருக்க வேண்டுமென்பது இன்றியமையா
தது. அத் தவந்தான் இல்லையாயின் மனிதர் பெறு
வதும் யாதொன்றும் இல்லை. வேண்டிய வேண்டியாங்
கெய்துதற்குத் தவஞ்செய்த லொன்றே வழி. "இலர்
பலராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோலாத
வர்" என்ற குறள் இவ்வாய்மையை இணையிலாவகை
வற்புறுத்துகின்றது. "தவமுந்தவமுடையார்க்காகும்
அவம்அதனை அஃதிலார் மேற்கொள்வது" என்பதும்
பொய்யாமொழியே. முன்செய்துவைத்த தவமிருந்தா
ற்றான் இப்பொழுதுசெய்யப்புகுந் தவமுங் கைகூடும்
என்றபின்னர், மனிதன் யாது செய்யவல்லன். ஒன்று
கைகூடுவதற்குத் தவமே காரணம், அத்தவந்தானுங்
கைகூடற்கு அதற்குமுன் செய்த தவமே காரணம்,
என்று இப்படியே, ஒவ்வொருகாரியத்திற்கும் மீண்
டும் மீண்டும் அந்தக்காரியத்தையே காரணமாகத் தொ
டர்த்திக்கொண்டு செல்ல நேர்ந்தக்கால் அச் சங்கிலி
யின் துவக்கத்தை எங்குவைத்து எண்ணுவது? தவத்
தின் இன்றியமையாவலிமையை நம்புகின்றமனம் இத்
தகையசலிப்பை எய்துவதுஇயற்கை. தவத்தினாற்றான்
அனைத்தும் ஆகுமெனின், அப்பால், உள்ளத்தி னூக்
கத்திற்கும் ஆள்வினையுடைமைக்கும் இடந்தாரமல்
மனிதர் ஏங்குதல்கூடும். இவ்வகையில் ஊழினை ஒத்
திருக்கின்றது இந்தத்தவம். தவமிருந்தாற்றான்தாளா
ண்மை பயன்படும் என்னும் நுண்ணிய உண்மையை
மறந்து, தவம் இருந்தால் எல்லாந் தானே வரும் என்
னும் பொய்யெண்ணங்கொண்டு, தவமிருப்பின்தாளா
ண்மை வேண்டாவென்ன அவமேஅயர்ந்துவிடுவார்
ஒரு சாரார். மற்றொரு சாரார் தவத்திற் கொன்றுந்
தனியிடந் தராமல், "முயற்சி திருவினையாக்கும்" என்
னுந் துணிவுபூண்டவராய், ஆக்கம் அதர்வினாய் வந்து
தம்மை அடையுமெனச் செப்புவார். எனினும், எண்
ணிறந்தோர்மாட்டு, மலைபத்தனைமுயற்சியினின்றுஎலி
யத்தனை பயனும் பிறவாமை காணுங்கால், பல்வேறு
சிந்தனைகளால் சிதைவுண்டு பின்வாழ்நாள் வறிதுவீழ்
கின்றார். அக்காரியத்திற்கேற்ற ஆற்றல் தம்பால் இரு
ந்ததில்லையோ என்னத் தளர்வார்சிலர். ஆற்றல்இருப்
பினும் கருமம் கைகூடாவகை இடையூறு செய்தார்
பிறர்பிறர் என முனிந்து வைகுவார் சிலர். இத்தகைய
நினைவுகளால்தீதொழியநன்மையில்லை. எடுத்தகருமம்
தொடுத்து முடிவதற்கு முன்னைத் தவம் இன்றியமை
யாதது என்பதும், மற்று, முயற்சியிருந்தும் அக்கரு
மம் முடியவில்லையாயின், அம் முன்னைத் தவம் இன்
மையே காரணம் என்பதும் ஆகிய இவ்விருதிறத்துச்
சிந்தனையும் இல்லையாயின் பின் மனிதவாழ்க்கை பய
னுறச் செல்லுவதற்கு வழியின்றித் தீர்கின்றது. வித்
தும்வேளாண்மையும் போலாம் தவமும் முயற்சியும்.
வித்தின்றிப் பயிர்விளைத்தல் இயலாதென்பது உண்
மையே. எனினும், வித்துளதாயின் தானே பயிர் விளை
யும்என வேளாண்மைவேண்டாதார் உளரோ! மற்று,
வேளாண்மை முயலுமாறு முயன்றக்கால் வித்துத்
தான் எற்றுக்கு என இயம்புவாரும் இலர். வித்தும்
வேளாண்மையும் ஒன்றற் கொன்று இன்றியமையா
வகையில் நிற்றல்போல் தவமும் முயற்சியும் நிற்கின்
றனஎன்னுந் தத்துவத்தை இவ்விடத்தே கம்பர்பெரு
மான் கதையுடன் சார்த்தி, "குறித்ததோர் பொருட்
கு முன்னுள் ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும்
இயைந்ததொத்தார்' எனச் சாற்றுகின்றார். முன்னே
நாள்செய்த தவம் உண்டோ இல்லையோ என்பதை யா
ரும் அறிதல்தேற்றார். முயன்றபின் முடிவைக்கொண்
டே அதனை அறிய இயலுமே யன்றி முன்னரே ஊகி
த்தல் ஆவதொன்றன்று. திலீப மன்னனது தன்மை
களைச் சொல்லிவந்த காளிதாஸமகாகவி, "தஸ்ய ஸம்
வருதமந்த்ரஸ்யகூடாகாரேங்கிதஸ்யச, பலாநுமேயா:
ப்ராரம்பா: ஸம்ஸ்காரா:ப்ராக்தனாஇவ" என வகை
ந்து கூறிய திறம் இங்குச் சாலச் சிந்திக்கற் குரியது.
பலனைப் பார்த்தபின்னன்றோ முன்னையவினை எங்ஙன
மிருந்ததென்று மதித்தல் கூடும்?

அவரவர் தம் கருமத்திற் கருத்துடையாராகி அத
னைக் கைவரப்பெறுவதற்கு முன்னைத்தவமும் பின்
னைய முயற்சியும் இயைவதன் இன்றியமையாமையை
வற்புறுத்திய கம்பர், இனி, உலகினை வருத்துகின்ற
தீமையை வேரின் வாங்குதற்கு இயைந்து நிற்கவல்ல
இரண்டினை இராமசுக்கிரீவ இணைக்கத்தோடு பிணைக்
கின்றார். தீமைகள் வேரோடு நீங்கவேண்டுமாயின்,
கல்வியும் ஞானமும் கைவரும்படி செய்வதொன்றே
கருமமாதல்வேண்டும். மற்ற ஆரவாரங்களெல்லாம்
அவ் வரக்கர்தம் பொல்லாத ஆட்டங்களுக்குப் பின்
னின்றடிக்கும் பறைகளேயாய்முடிகின்றன. இதுநமக்
குக்கண்கூடு. கம்பரனைய புலமையுடைய காட்சியோர்
க்குக் கல்வியோடு ஞானமும் அமைகின்ற அருமை
யோ இரகசியமன்று. கல்லாமற் கிடைத்த அறிவெல்
லாம் பேசு முயற் கொம்பே. கல்லாதவற்குச் சிற்
சிலபோது நல்லுணர்வு இருப்பினுமிருக்கலாம்; அறி
வென்பதுதோன்றாது. உணர்வின்இயக்கம்வேறு அறி
வின் திறம் வேறு. கைகேசியின் உணர்வுபோல் அது
மிக எளிதில் திரிந்துவிடும். இவ் வுணர்வின் நன்மை
கூடக் கல்லாதவர்க்கு இருக்கலாமென இயம்ப மன
மிலராகிய வள்ளுவர், "கல்லாதவரும் நனிநல்லர் கற்
றார்முற்சொல்லாதிருக்கப்பெறின்" என இளிவரநகு
வார். இனி, கல்வியில்லாமல் அறிவும்இல்லை என்னும்
கொள்கையை நிலைநிறுத்தற்கு, "தொட்டனைத் தூறு
மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு"
என்னும் திருக்குறள் கடைசி வாசகமாக நிற்கின்ற
தென்பதை மறத்தலாகாது. அக் கல்வியும் கேட்டு
ணர் கல்வியா யிருத்தல்வேண்டு மென்பதைக் கம்பர்
அமயம் அகப்பட்ட விடமெல்லால் மறவாமல் ஓது
வார். கல்வியுங் கேள்வியும் ஒன்றற் கொன்று இன்றி
யமையாமை கம்பரின் தனிப்பெருங் குறிப்புடைய
கொள்கைகளில் ஒன்று.

கல்வியுடையார்க் கன்றி அறிவுடையாத லரிது எ
ன்றமையால், கல்வியுடையோ ரனைவரும் அறிவுடை
யவரும் ஆகின்றார் என்ற முடிவு தருகத்திற் கியைந்த
தன்று. முதலில், இந்தக் கல்வி, கலகலவென்றோதும்
கருவிநூல் கல்வியோடு நில்லாமல் அறிவினூற் கல்வி
யாதல் வேண்டும். அன்னவாறு ஆகியும் மெய்யறிவு
தோன்றாமற் போதலுங் கூடும். ஊழினாலோ இயற்
கையாகவேயோ, பெற்றோர் வழியாகவோ, அல்லது
முன் செய்த தவத்தினாலோ, அமைந்திருக்கின்ற அறி
வைத்தான் கல்வியானது, உள் இருந்த நீரே தோண்
டியபின் கேணியாவது போல், வெளிக் கொணர்ந்து
உதவும். ஆதலாற்றான் கற்றுந் தேற்றாதவர் எத்தனை



யோ பலர் எங்கும் எக்காலும் உளர். முன்னைத்தவம்
உண்டோ இல்லையோ என்பது ஒரு கருமத்தை முய
ன்று முடிவினைக் காணும்வரையில் ஒருவனாலும் ஊ
கிக்க இயலாமை போன்றே, ஆதி அறிவுடைமையும்
இல்லாமையும் கற்றுப் பார்த்தபின்னரே தெரியவரல்
கூடும். ஆதலாற்றான், "என்னொருவன் சாந்துணையுங்
கல்லாதவாறு" என்று கேட்கின்றார் திருவள்ளுவர்.

இன்னவிதம் முன்னுரைத்தபடிகேட்டுணர்கல்வியும்
ஞானமும் உலகத்திற்குக் கிடைத்தனான்றே தீவினை
வேரற நீங்கி உலகம் உய்யவல்ல நிலையை அடையும்.
இராமனும் சுக்கிரீவனும் அது செய்யச் சேர்ந்திருக்
கின்றனர். வான்மீகி முனிவர் இயம்பியவண்ணம்,
இனி, அரக்கர்களுக்கு இடது கண்கள் துடிக்கின்றன.

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[196-வது பக்கத் தொடர்ச்சி]

### கந்தன் சரிதையின் இதோபதேசம்.

பாற்குடம் ஒன்றில் தயிர்த்துளி சிறிதுவிழுமாயின்,
பால் எவ்வாறாகுமோ அவ்வாறே நல்வினையின்
பெரும்பயனும் மும்மலங்களின் சேட்டையான தீவி
னைச் சேர்க்கையால் திரிந்துவிடுமென்பது, தக்கன் சரி
தையாலும் சூரபன்மன் சரிதையாலும் விளங்குகின்
றது. அத்தீவினை நேர்ந்த இடத்துடன் மாத்திரம் நில்
லாது சேர்ந்த கூட்டத்தையும் கெடுக்கு மென்பதும்
விளங்குகின்றது. சூரன் தம்பியர் முதலானோர் அண்
ணன் குற்றத்தால் அழிந்தது போல், தக்கன் குற்றத்
திற்கு அறிந்தும் அறியாதும் துணைபுரிந்த ஆதித்தன்
முதலானோர் வீரபத்திரர் கையால் துன்புற்றது எண்
ணத்தக்கதாம். இவ்வாறு சேர்க்கையின் பயன் இயற்
கையின் பயனினும் பலன் அதிகம் தரக்கூடு மென்ப
தும் விளங்குகின்றது.

மற்றும் கலகங்களுக்கெல்லாம் காரணமாயிருப்ப
வர்எக்காலத்திலும் பெண்மக்களென்பதும், ஆண்மக்
கள் அவர்கள் வார்த்தையை வெகு சாக்கிரதையுடன்
அங்கீகரிக்கவேண்டு மென்பதும், தக்கன் சரிதையும்
சூரபன்மன் காதையும் ஓதும். மனைவியாயிருப்பவர்*
வார்த்தைகளைக் கேட்டு ஆண்மக்கள் பழிக்கு ஆளா
வது தொன்றுதொட்டுப் பல்லோர் அறிந்த விஷயம்.
மனைவிமாத்திரமல்லாமல்உடன்பிறந்தாள், மகள் முத
லிய பெண்மக்கள் வார்த்தைகளும்அவ்வாறே உடன்
பிறந்தோர் தந்தை முதலானோருக்கு ஆபத்தை விளை
விக்கக் கூடுமென்பதும் கந்தன் சரிதையின் இதோப
தேசத்தில் ஒன்றாகும். மனைவியின் "தலையணை மந்
திர"த்தால் துன்பம் வருமென்பதற்கு யாதொரு இதி
காசமும் வேண்டுவதில்லை. கணக்கற்ற அத்தாட்சிகள்
பிரதிதினமும் காணலாமாகையால், அவ்விஷயத்தை
இச்சரிதை விவரிக்கவில்லை. தக்கன் பிரிய மக்களான
இருபத்தெழுவரும் சந்திரனை மணந்தனராயினும்,
ரோகணியின் மீது சந்திரன் அதிக மோகமுற்றவனா
யிருக்கின்றானென்று மற்றவர் தக்கனிடம்முறையிட்
டதன்பயனே முடிவில் தக்கனது அழிவுக்கு ஏதுவா
யிற்று. இதுபோலவே அசமுகி இந்திராணியைக்கைப்
பற்றமுயன்றதும்அவள்வீரமாகாளரால்அவயவபின்
னமானதும், அவள்பின்னர்ச் சூரபன்மனிடம்முறை
யிட்டதும், தேவர் சிறைக்குக் காரணமாய், சூரபன்
மன் முதலானோர் நாசத்திற்கு மூலகாரணமாயிற்று.

இராமாயணத்தில் சூர்ப்பணகை எவ்வாறு இராவண
குடும்பத்திற்கு அழிவுதேடினாளோ அவ்வாறே அச
முகி சூரபன்மாதியருக்கு முடிவு தேடினாள் இன்றேல்,
அன்னோர் ஆட்சி பல்காலம் பின்னும் நீடித்திருக்கு
மன்றோ?

இல்வாழ்க்கை மகளிரின் ஆட்சிக்கே பெரும்பாலும்
உட்பட்டிருக்கின்றது. திருநாவுக்கரசர் மொழிந்தது
போல்

தாழ்குழலின்சொல்நல்லார் தங்களைத்தஞ்சமென்று
ஏழையேனாகிநாளுமென்செய்கேனெந்தைபெம்மான்
வாழ்வதே லரிது போலும் வைகலு மைவர் வந்து
ஆழ்குழிப் படுத்த வாற்றே னாரூர்மூ லட்ட னீரே

திருவாரூர் - திருநேரிசை - 5.

என்றும்

பஞ்சின்மெல்லடியினார்கள்பாங்கராயவர்கள்நின்று
நெஞ்சில்நோய்பலவுஞ்செய்துநினையினும்நினையவொ
நஞ்சணிமிடற்றினானேநாதனேநம்பனேநான் [ட்டார்
அஞ்சினேற்கஞ்சலென்னீராரூர்மூலட்டனீரே

—திருவாரூர் - திருநேரிசை - 3.

என்றும் நன்னடை இன்சொற்கள் உடையகுடும்பமா
தரும் ஆடவரைத் துன்பத்திற்கு ஆளாக்குவது காட்
டப்பட்டிருக்கின்றது. அன்னோரால் தீவினைக்குழியில்
விழுத்தப்பட்ட வொருவனைமாத்திரம் அத்தீவினை
பற்றி எரித்துவிடாமல் அவன்மக்களையும் அது தொ
டருமென்பதும் தக்கன் சரிதை குறிப்பிடுகின்றது. தக்
கன் மகளாய்ப்பிறந்ததாட்சாயணி அவன்செய்தபாவ
த்தால் தான் அவ்வுருவம் தாங்கலாகாதெனக் கயிலை
யைவிட்டு நீங்கிப் பர்வதராசனுக்கு மகளாய்ப் பிறந்த
வரலாற்றை அப்பர் அரிய சொற்றொடர்களால் பின்
வரும் பாசுரத்தில் விளக்குவது காண்க:—

பெருந்திரு விமவான் பெற்ற
பெண்கொடி பிரிந்த பின்னை
வருந்துவான் தவங்கள் செய்ய
மாமணம் புணர்ந்து ம[illegible]
அருந்திரு மேனி தன்பா
லங்கோரு பாக மாக[illegible]
திருந்திட வைத்தார் சே[illegible]
செந்நெறிச் செல்வ [illegible]

—திருச்சேறை - [illegible]

199165

இவ்வாறு துர்க்குணத்தால் ஒருவன் தானும் தன்
சுற்றத்தாரும் பெற்ற நல்வினைப்பயனை அழியச் செய்
விப்பது போல், நற்குண நற்செய்கையாலும் தெய்வ
பக்தியாலும் விதியையும் வெல்லலாமென்பதும், சில
முடையோர் தவப்பயனால் இயற்கைத்தத்துவத்தைத்

* குழலை யாழ்மொழி யாரிசை வேட்கையால்
உழலை யாக்கையை யூனு முணர்விலீர்
தழலை நீர்மடிக் கொள்ளன்மின் சாற்றினேம்
மிழலை யானடி சாரவின் னுள்வரே

திருவீழிமிழலைத் திருக்குறுந்தொகை. 6.

தலைகீழாக மாற்றக் கூடுமென்பதும் மார்க்கண்டேயர் சரிதையால் விளங்கும் - குச்சகமுனிவர் உசத்தியமுனிவர் புதல்வியாகிய விருத்தையை உயிர்ப்பித்ததும் பின்னர், தூயரான தன்மகன்மிருகண்டுவுக்குஅவளை மணமுடித்ததும் அத்தம்பதிகளுக்குப் பிறந்த மார்க்கண்டேயர் சிவபெருமான் அருளினால் இயமன் வலியைத் தொலைத்ததும் மார்க்கண்டேயர் படலத்தில் நன்கு விளங்கு மன்றோ?

இம் மார்க்கண்டேயப்படலம் கந்தன்சரிதையில் அசுர காண்டத்தில் காசிபமுனிவர் மாயையினிடம் பெற்ற சூரபன்மன் முதலான மக்கட்குத் தவத்தின் பெருமையை விளக்கிக் காட்டிய காதையாகும். அகத்திய முனிவரின் மகிமையும் பக்தியும், பிரம்மஹத்தியைச்சிவபூசையால் நிவர்த்தித்ததும், கமண்டலசலத்தைக் காகவடிவாய்வந்து கவிழ்த்த விநாயகக்கடவுள் விஷயத்தில் அவர் தன்புறத்துமாறு குட்ட எண்ணியதும்பிறகு விநாயகரென்று அறிந்தபின்னர் அவர் கேட்ட வரமும் கவனிக்கத் தக்கன.

சூரபன்மனுக்கு மகனாய்ப் பிறந்த இரணியன் நற்புத்தியால் தவஞ் செய்து மோட்சம் பெற்றது அரக்கனாய்ப் பிறந்தவனுக்கு முத்தி மார்க்கம் மூடப்படவில்லை யென்பதை விளக்கும். தேவேந்திரனானும் இல்வாழ்க்கையை வெறுத்துத் தவஞ்செய்து வீடுபெற முயல்வதற்குத் தேவ குருவும் தடையானரென்பது இந்திராபுரிப்படலத்தில்காணலாம். உலோகாயத மதத்தால் மயக்கப்பட்ட இந்திரன் தனக்கு உதித்தவொரு ஞானத்தை நிலைநிறுத்தாமையால் தன்பதவியினல்வினைப் பயனை அனுபவித்துக் காலங் கழித்தான். இன்னவாறு காலங்கழித்து வேரூரின்றிமறைந்த இந்திரர்களை எண்ணுவதிலும் கடலின் மணலை யெண்ணலாகு மென்பர் அட்பர். கந்தன் சரிதையின் இதோபதேசம் தொகுதியாய்ப் பின்வருமாறென்னலாம்:—

> வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
> வெந்த நீறன் விசயமங் கைப்பிரான்
> சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
> பந்து வாக்கி யுய்யக்கொளுங் காண்மினே
> — திருவிசயமங்கை - திருக்குறுந்தொகை - 9

> பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
> திருக லாகிய சிந்தை திருத்தலாம்
> பருக லாம்பர மாயதோ ரானந்தம்
> மருக லானடி வாழ்த்தி வணங்கவே.
> —திருமருகல் - திருக்குறுந்தொகை - 1

(கந்தன் சரிதை முற்றிற்று)

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

6-ம் பத்து, 5-ம் தசகம்

[217-வது பக்கத் தொடர்ச்சி.]

### 2-ம் பாசுரம்

> குமுறு மோசை விழவொ லித்துலை
> வில்லி மங்கலங் கொண்டுபுக்
> கமுத மென்மொழி யாளை நீருமக்
> காசை யின்றிய கற்றினீர்
> திமிர்கொண் டாலொத்து நிற்கும் மற்றிவள்
> தேவ தேவ பிரானென்றே
> நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க
> நெக்கொ சிந்து கரையுமே.

**பதக்குறிப்புக்கள்:**—திமிர்கொண்டா லொத்து-சரீரமானது திமிர்ப்பதினால் (வைத்தியநூல்கள் வாதம் இசிவு வலி என்று சொல்லும்வண்ணம்) ஒரு சேஷ்டைக்கும்இசையாமல்பீடிக்கப்பட்டு இருப்பதைஒத்திருக்கிறது என்றுபொருள். நிமியும்-உதடுகள் அசங்கும், ஆனால் வாய்திறக்காதுஎன்றுபொருள். நெக்கு-நெகிழ்ந்துதளர்ந்து, ஒசிந்து-தன்வசமில்லாமல்உடைந்து, கண்கள் நீர்மல்கஅழும். ஓசை-வாத்தியங்களின், [illegible]மான ஒலி, விழவொலி - திருவிழாவில் உற்சாகத்தில்[illegible]ம் குதூஹல சப்தங்கள். இவைகள்எல்லாம் சா[illegible]ணமான மானிடப்பெண்ணை உற்சாகஞ்செய்யவே[illegible]யிருக்க நீங்கள் விபரீதமாய்நினைத்துக்கேவலம்[illegible]வான தேன்போலுள்ள பேச்சுப் பேசுமிவளை[illegible]திறந்து ஒரு வார்த்தைகூடப் பேச[illegible] இவளின் தேன் மொழியை இழந்துவிட்டீர்கள்-உம்மால் விளைந்தகேடு இது, முழுவதும் எம்பெருமானிடத்தி லீடுபட்டுவிட்டாள் என்று ஒருவாறு தோழி கூறுகிறாள். அடுத்தபாசுரத்தில், உங்களுடைய இழவு நீங்கள் வேணுமென்றே தேடிக்கொண்டதென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்வதறியத்தக்கது. இப்பாசுரத்தில் வலிய வந்த விதியென்று மாத்திரம் கூறியதாக ஆகிறது. இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்கமாட்டாள் என்று பொருள்.

---

### 3-ம் பாசுரம்.

> கரைகொள் பைம்பொ ழிற்றண் பணைத்துலை
> வில்லி மங்கலங் கொண்டுபுக்
> குரைகொ ளின்மொழி யாளை நீருமக்
> காசை யின்றி யகற்றினீர்
> திரைகொள் பௌவத்திற் சேர்ந்த தந்திசை
> ஞாலந் தாவி யளந்ததும்
> நிரைகள் மேய்த்த துமேபிதற் றிநெடுங்
> கண்ணீர் மல்க நிற்குமே.

**பதக்குறிப்புக்கள்:**—கரைகொள் பைம்பொழில் - இடவெளியில்லாமல் எங்கும் ஊர் அருகாமை வரையில் கவர்ந்து கொண்டிருக்கிற சீதளமான உத்தியானவனங்கள்.

உரைகொள் இன்மொழியாள்-கேவலம்பேசும்சப்தமாத்திரத்தாலே இன்பமாய்ப் பிறர் கேட்க வார்த்தைகளை ஸஹஜமாய்ப் பேசுகின்றவள். அர்த்தபுஷ்டி விமர்சம் அல்லாமலே வெகு ரஸமான பேச்சுக்குரல் என்று தாத்பரியம். உமக்கு ஆசையின்றியகற்றினீர்-நீங்கள் இவளிடத்தில் பூர்ண ஆசை வைக்கவில்லை, அதினால்தான் வில்லிமங்கலங் கொண்டு சென்றீர் - ஆசையிருந்தால் இப்படிச்செய்வீர்களோ? ஆகையால் அகற்றினீர் - இவளை வேண்டா வென்றே விலக்கிவிட்டீர்கள் திரைகொள் பௌவம் - தரங்கங்களுடைய பாற்கடல் - க்ஷீராப்தி - பிரம்மாமுதலானோர் தங்கள் குறைகளை, கண்வளர்ந்தருளுகின்ற பகவானிடத்தில் சொல்லிக்கொள்ளச்சேர்ந்ததும்,மண் அளந்ததும்பசு மேய்த்ததும், இவைகளை எல்லாம் பிதற்றிக் கண்களுக்கு வெளித்தோற்றம்மறைந்து ஒன்றுமறியக்கூடாத வண்ணம் கண்ணீர் மல்க நிற்பாள். தன் உதவியைக் கொண்டு இப்பிராட்டியை உலக வியல்புக் குப்புத்தத் தரவேணுமென்று அபேக்ஷிக்கும் தாய்மாரை இவ்வண்ணம் இப்பிராட்டியின் தோழி குற்றஞ்சாட்டி முனிந்து பேசலாமோவென்னில் தோழியின்கருத்து இவர்களைஉபேக்ஷித்துப்பேசவேண்டுமென்றல்ல! இப்பிராட்டியை வில்லிமங்கலத்துக்குக் கொண்டுசேர்ந்த பொழுதேஅவ்விடத்திய எம்பெருமானிடத்தில்இப்பிராட்டிக்கு மீட்சியில்லாத ஈடுபாடுதோன்றி ஊன்றிப் போய்விட்டதே! இனி நிரம்ப வளர்ந்துபோன மோகத்தை நிவிர்த்திசெய்ய இயலாதே! என்ன செய்யலாம்! என்ற வெறுப்பினால் தன் இழவையும் தாய்மாருடன் கலந்துகொண்டுபரிதபித்து வியசனப்பட்டபடிஎன்று கொள்ளவேண்டும்.

---



### 4-ம் பாசுரம்

> நிற்கும் நான்மறை வாணர் வாழ்துலை
> வில்லி மங்கலங் கண்டபின்
> அற்க மொன்று மறிவு றாள்மலிந்
> தாள்கண் டீரிவ ளன்னைமீர்
> கற்குங் கல்வி யெல்லாங் கருங்கடல்
> வண்ணன் கண்ணபி ரானென்றே
> ஒற்க மொன்று மிலளு கந்துகந்
> துண்ம கிழ்ந்து குழையுமே.

அவதாரிகை:-இப்பிராட்டியை மீட்டிக்கொடுக்குங் காலம் கடந்துபோயிற்றென்று சொன்ன தோழிஇப்பாசுரத்தில் விவரிக்கும்அறிகுறிகளால் தன்னாலாவது ஒன்றுமில்லைஎன்ற தன்மனத்திட்பத்தைத் தாய்மாருக்குத் தெரிவிக்கிறாள்.இக்குறிகளை எடுத்துக் காண்பிப்பதால் புனர்உத்தி தோஷமில்லை. ஏனெனில், இப்பிராட்டி, அற்கம் ஒன்றும் அறிவுறாள்-அதாவது பெண்களுக்குஇயல்பான அற்கம் = அடக்கம், ஒன்றும் = கொஞ்சமேனும், அறிவுறாள் = அறிந்தவளாகக் காணப்படவில்லை

மலிந்தாள் கண்டீர் - உங்களுக்கே தெரியக் கூடிய வண்ணம்விஞ்சியிருக்கிறாள்.—அடங்குகிறவளல்லள் என்று கூறுகிறபடி. கருங்கடல் வண்ணனையே கற்கிறாள். கண்ணபிரானென்று — சுந்தரமான வடிவழகையுடைய கிருஷ்ணன், பிரானென்று - தனக்கு அன்புதந்து உதவிபுரிந்த பிரபுவென்று. பாடம் புகட்டுகிறவனை யனுசரித்துச்சீடர்கள் ஒவ்வொருபதமாய்ப் பாடம் கற்பதுபோல் விட்டுவிட்டுச் சொல்கிறாள்.ஒற்கம் ஒன்றும் இலள் - ஒற்கம் - தக்கவர்முன் அடக்கம். "புலவர்கள்முன் கற்றறியா மூடன் வாய்திறந்து சபையில்பேசுவதை-"ஒற்கமின் றிணத்தைவாய் அங்காத்தல்" என்றார்பிறரும். உகந்துகந்து பகவானின் திருநாமங்களையே தன்உகப்பும் ஈடுபாடும்உலகறியத் திறந்து சொல்லுகிறாள்— "உள்மகிழ்ந்து குழையும்" பிறர்சிரிக்கத் தன் குறையை வெளிப்படுத்தும். குழையும்-நீராய் உருகும். நிற்கும் நால் மறைவாணர்—நிற்கும் - சநாதந தர்மத்தை எப்போழ்தும் அழியாமல் காக்கும் நாலுவேதங்களைக் கற்று நிபுணரான பிராமணர்கள், வாழ்-சாந்தியோடும் பக்தியோடும் பகவானைத் துதித்து ஆநந்தப்படுபவர்கள் உற்சாகத்தோடு வஸிக்குந் திருத்துலை வில்லிமங்கலம்.

---

### 5-ம் பாசுரம்

> குழையும் வாண் முகத் தேழை பைத்துலை
> வில்லி மங்கலங் கொண்டுபுக்
> கிழைகொள் சோதிச் செந்தா மரைக்கட்
> பிரானி ருந்தமை காட்டினீர்
> மழைபெய் தாலொக் குங்கண்ண நீரினொ
> டன்று தொட்டு மையாந்திவள்
> நுழையுஞ் சிந்தைய ளன்னை மீர்தொழு
> மத்திசை யுற்று நோக்கியே.

**குறிப்புக்கள்:**—[illegible]ண்முகம் - காந்தியுள்ள முகம். குழையும்-தளர்ந்து பரிதபிப்பதைக் காணலாமென்று கருத்து. இழைகொள் ஜோதி-எம்பெருமான் பூணும் ஆபரணங்களின் காந்தி அவனது ஸ்வய ஜோதியில் ஒன்றுபடும்படி இழைந்து காணுகின்றது என்று தாத்பரியம். மையாந்து - கலங்கி.

**பொழிப்புரை:**—அழகிய திருமுகத்தை யுடையவளாய்ப் பண்டே எம்பெருமான் திறத்தில் அதிகஆசைப்பட்டிருந்த இப்பிராட்டியைத் திருத்துலை வில்லிமங்கலத்திலே கொண்டுபுக்குத் தன்னுடைய திவ்ய பூஷணங்களுடைய நிரவதிககாந்தியின் வெள்ளமெல்லாம் தன்னுள் ளடங்கும்படி பெருகுகின்ற நிரவதிகமானஜோதியின் வெள்ளத்திலே பரிபூர்ணமாய் அலர்ந்ததொரு தாமரைத் தடாகத்தினுடைய குளிர்ச்சியையும் அழகையுமுடைத்தான திருக்கண்களையுடையவராய் எம்பெருமான் எழுந்தருளியிருந்த இருப்பைக் காட்டினீர் - அன்றுதொடங்கி மழை பெய்தாலொக்கும் கண்ணின் நீரோடுமயங்கி அக்கண்களையே நினைத்து அந்தத் திக்கை நோக்கித் தொழாநிற்கும். இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ வென்கிறாள்.

**விசேஷக் குறிப்பு:**—பகவானின் ஸந்நதியில் இல்லாதபோதும் திக்கு நோக்கித் தொழும்.

**குறிப்பு:**—"மத்சித்தம் ஸத்தம் பவ" என்ற கட்டளைப்படி எப்போழ்தும் அவனிடத்திலேயே சித்தம் செல்லும் என்றபடி.

---


# திருக்குறள் மூலமும் சொற்குறிப் பகராதியும்.

**வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு**

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்குமாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமாயிருக்கும். ஒப்புக்குறள்களையும் தொகுத்துப் பதிப்பாசிரியர் அளித்திருப்பது மிகவும் பயனுடையதாம். பயிலப்பயில இப்பதிப்பின் பெருமையும் அருமையுந் தெரியவரும். விலை—அணு 12. தபால் செலவு வேறு.

கலாநிலயம், புரசை. சென்னை.

## தமிழ்வேதக் கடலமுதம்

[87-வது பக்கத் தொடர்ச்சி]

பற்பல அர்த்த விசேஷங்களை விரிவாக விளக்குதற்கு ஏற்பட்ட அளவுகடந்த சாஸ்திரங்களை அதிகரிக்கவேண்டுமாகில் அரியபெரிய அனேகயோக்கியதைகள் இன்றியமையாதனவாகவுள்ளன. எங்ஙனேயெனின்;—

உப்புக்கடல் கருப்புக்கடல் கள்ளுக்கடல் நெய்க்கடல்தயிர்க்கடல்பாற்கடல் நீர்க்கடலென்ற ஏழுகடல்களாலுஞ் சூழப்பட்ட ஏழு தீவுகளுக்கு, முறையே ஜம்பூத்வீபமென்றும் ப்லக்ஷத்வீபமென்றும் சால்மலத்வீபமென்றும்குசத்வீபமென்றும்க்ரௌஞ்சத்வீபமென்றும் சாகத்வீபமென்றும் புஷ்கரத்வீபமென்றும்பெயர். இவற்றுள் ஜம்பூத்வீபம்மற்றஎல்லாத்தீவுகட்கும் நடுவிலுள்ளது. அதன் நடுவில் மேரு என்னும் பொன்மலை யுள்ளது; அதனைச் சுற்றியுள்ள இளாவ்ருத வருஷத்தில் ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள நான்கு மலைகளைச் சுற்றி நாற்றிசையிலும் நான்கு மரங்களுள்ளன. அவற்றி லொன்றாகிய நாவல்மரம் ஜம்பூத்வீபமென்று இத்தீவின் பெயர் வழங்குதற்குக் காரணமாயிற்றென்று புராணங் கூறும். மற்றைத் தீவுகள் கருமபலன்களை அனுபவித்தற்கு மாத்திரமே உரியவையாதலாலும், இத்தீவு, பலன்களுக்குச் சாதனமான கருமங்களை அனுட்டிப்பதற்கும் உரிய இடமாதலாலும் இத்தீவு ஒன்றே சிறப்புறும். இதுதன்னிலும் ஒன்பதாவது கண்டமான பாரத வருஷத்திற்குத்தான் அந்தச் சிறப்புஉள்ளது. ஆக விப்படிச் சிறந்ததான நாவலம்பெரிய தீவினி லொன்பதாங்கூற்றில் ஜனிக்கப்பெறவேணும். இதில் பசு பக்ஷி முதலான யோனிகளிற் பிறவாமே மானிடயோனியிற் பிறக்கப்பெறவேணும். அதிற் பிறந்தாலும் வாழ்நாள் அற்பமாக ஒழியாமே உடல்நிலை பெற்றிருக்கப்பெறவேணும். அது நிலைபெற்றிருக்கப்பெறினும் இதர வருணத்திலன்றியே பிராமணவருணத்திற் பிறவிபெறவேணும். அதிற் பிறந்து வைத்தும் வாணாளை வீணாளாக்காதபடி, புத்தி கொழுந்துவிட்டு, சாஸ்திரங்களைப் பயில்வதற்குறுப்பான ஞானஒளியிளமையும் ஆஸ்தையும் வேணும். இவ்வளவும் வாய்த்து வாழ்நாளுக்குள்ளே இடையூறுகள் ஒன்றுமின்றியே சஞ்சலமான நெஞ்சைக்கொண்டு சுருதி ஸ்மிருதி முதலிய ஸகல சாஸ்திரங்களையும் ஆழ்ந்து அதிகரிப்பது மிகவும் அருமைப்படும். இப்படிப்பட்ட அருமையை எம்பெருமான் திருவுள்ளம் பற்றியே திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை வெளியிட்டருளினன்.

அந்தத் திருமந்திரம் எப்படிப்பட்டதென்னில்;— கருமகாண்டமும் பிரமகாண்டமுமாகக் கலசியுள்ள வேதத்தில் ஸாரமானது உபநிஷத்பாகம். அதிலும் ஸாரதரமாகவுள்ளது நாராயணாநுவாகம். அதிலும் ஸாரதமமாகவுள்ளது மூன்று வியாபக மந்திரங்களைக் காட்டுகின்ற விஷ்ணுகாயத்ரி. அப்படிப்பட்ட காயத்ரியிலே "நாராயணாய வித்மஹே" என்று முதலில் ஓதப்பட்டு ஸகல்வேதச்சுருக்கமாயிருப்பது அத்திருமந்திரம். இத்தகைத்தான திருமந்திரம் "எனக்கென்றுந் தேனும் பாலுமமுதுமாய திருமால் திருநாமம் ......நமோ நாராயணமே" என்ற திருமங்கையாழ்வார்அருளிச்செயலின்படியேதேனாகவும் பாலாகவும் அமிருதமாகவும் பிரஸித்தமாகையினாலே இப்படித் தேனும் பாலும்அமுதுமான விதனை எம்பெருமான் வேதத்தில்நின்றும் கிரஹிக்கின்றபோது எவ்வண்ணம் கிரஹித்தானென்னில்; தேனைக் கிரஹிப்பதில் சாகைகளி லுலாவும் வண்டு தான் ஸமர்த்தமாகையாலே, ஸாரபூதமான ஸகலப் பொருள்களையும்தெரிவிப்பதனால் ஸர்வாஸமான தேன்போன்றதான திருமந்திரத்தை எம்பெருமான் வண்டாகி (வேத) சாகைகளிலிருந்து க்ரஹித்தான். [திருவாய்மொழியில் "தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு" என்று எம்பெருமான் ஸாரக்ராஹி யென்பது பற்றி வண்டாகச் சொல்லப் பட்டிருத்தல் உணர்க.] வண்டு சாகைகளிலிருந்து [-கிளைகளிலிருந்து] தேனைக் ரஹிப்பதுபோல் எம்பெருமானும் வேதசாகைகளிலிருந்து திருமந்திரத் தேனை க்ரஹித்தா னென்க.

இனி, பாலைக் கிரஹிப்பதில் அன்னப் பறவையே ஸமர்த்தமாகையாலே "அன்னமாய் அன்றங்கு அருமறைபயந்தான்" என்ற பெரியார் பாசுரத்தின்படியே எம்பெருமானும் ஹம்ஸரூபியே. ஹம்ஸமானது நீரிலே கலந்துகிடக்கிற பாலைவிவேகித்துஎடுப்பதுபோல எம்பெருமானும், "நானுஞ் சொன்னேன் நமருமுரைமின்" என்னும்படி ஸர்வாதிகாரமா யிருக்கையிலே பால்போன்றதாகச் சொல்லப்பட்ட திருமந்திரத்தை ஓதம்போல் கிளர்வேத நீரிலிருந்து க்ரஹித்தான்.

இனி, அமிழ்தத்தைக் கிரஹிப்பதில் அமுதங்கொண்ட பெருமானாகிய எம்பெருமான்றானே ஸமர்த்தனாகையால், அசுரர்களிடத்து அஞ்சினவர்களாய் அமரத்தன்மையை விரும்பினவர்களான தேவர்களினுடைய ரக்ஷணத்திற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதமளித்தது போல, ஸம்ஸாரத்தில்நின்று அஞ்சினவர்களாய் வானோர்க்காராவமுதை விரும்பினவர்களான முமுக்ஷுக்களின் ரக்ஷணத்திற்காக விலக்ஷண போக்யமாய் விநாசஹாரமுமாகையாலே அமுதம்போலேயிருக்கிற இத்திருமந்திரத்தை நால்வேதக்கடலிலிருந்து க்ரஹித்தளித் தருளினன். ஆக விப்படி வேத ஸாரமான திருமந்திரத்தைத் தானே யெடுத்துப் பிணியொழித்து அமரர் பெருவிசும்பருளும் பேருளாளனானபெருமான் அப்படிப்பட்டநிர்ஹேதுககிருபையினாலே வதரியாச்சிரமத்திலே நரநாராயண ரூபியாய்த் திருவவதாரஞ் செய்தருளித் தானே சிஷ்யனுமாய் ஆசாரியனுமாய் நின்று ஸ்வரூப சாஸ்திரம் சுருங்கிப் போகாமல் உபதேசத்தாலும் அனுட்டானத்தாலும் விஸ்தரிப்பித்தருளினன். ஆக, எம்பெருமான் தனது இயற்கை யின்னருளாலே ஸம்ஸாரிகளை உய்வித்தற்பொருட்டுச் சாஸ்திரங்களையும் சாஸ்திர தாத்பரிய ஸங்கிரஹமான திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தையும் வெளியிட்டருளினமை சொல்லிற்று இது வரையிலும்.

---



## மதுரைக் கோவை

[206-வது பக்கத் தொடர்ச்சி]

### XV. இரவிற்குறி.

இரவிற்குறி வேட்டல்.

கொங்கைத் துணைகொண் டனங்காபி ஷேகங்
குறைபடுத்து
மங்கைப் பருவ மடந்தைநல் லாய்மது
ரேசர்வெற்பில்
கங்குற் பொழுது புயலை காடவிக்
காடுபுக்க
தொங்கற் கொடிநெடுந் தேரையெவ் வாறின்று
தூண்டுவதே. 190

ஆற்றது தீமையாய் இரவுக்குறி மறுத்தல்

கடங்கொழிக் குங்கைப் பொருப்பொரு பாலொரு
பாலடங்கா
விடங்கொழிக் கும்பைப் பணியொரு பால்முத்த
வெள்ளைநிலா
வடங்கொழிக் கும்புயத் தார்மது ரேசர்
வரையிலிந்தத்
தடங்கொழிக் கும்பகை வெள்ளமெவ் வாறண்ணல்
சாதிப்பதே. 191.

ஆறேளி தென்றல்.

குலவும் பொருபரித் தேர்ச்சொக்க நாயகர்
கூடலினு
லுலவுங் கருங்கங் குலுஞ்சரி சாரலு
முங்கணைகை
நிலவுங் கருணை வினைவெலு நீர்தந்த
நெஞ்சும்பெற்றாற்
பலவெம் பகையு மொருபொரு ளோமடப்
பாவையின்றே. 192.

நினக் கேதமுறத் தலைவி யிறந்து[படு]மென்றல்

வாருக் கிணங்கு முலையுமை பாகர்
மதுரையினுன்
போருக் கடுகளி றஞ்சுமென் றூலும்
பொருவரிய
தாருக் கிணங்கும் புயபூ தரர்கடஞ்
சாரனின்ற
சூருக்கி வளஞ்சு மஞ்சுமென் னேவந்து
சூழுமென்றே. 193.

தலைவ னாற்றதுரைத்தல்

வரிக்கும் குமமுலை தோயாத காதல்
மதனவிடாய்
பரிக்குஞ் சலம்புரி பாவிநெஞ் சேயிளம்
பானிலவங்
குரிக்குஞ்சடாடவி யார்சொக்க நாயகர்
கூடலினன்
தரிக்குந் தகைமைய தோமடப் பாவை
தருமயலே. 194.

தோழி யுடம்படுதல்

சுணங்குக் கிணங்கு முலையிட மாகிய
சொக்கர்வெற்பி
னிணங்கக்குஞ் செஞ்சுடர் வேலண்ண லேநிரை
வெங்களிற்றின்
கணங்கெட் டிரிய வரிதிரி சாரலிக்
கங்குல்வந்தால்
அணங்குக் கிணங்குவ தோவறி யேனு
னவமதியே. 195.

தோழி தலைவியோடு இரவுக்குறி வேண்டல்

வள்ளத் தமுதனை யாய்சிலை யாளி
வடித்தமயல்
வெள்ளத் தளவின்மை யேதுசொல் வேன்கொள்ளை
வேரிவண்டு
கொள்ளக் கமழ்கொன்றை யார்கூடல் வாய்நெஞ்சு
கொண்டொரு[வர்]
உள்ளப் பவனி வருங்கங்குல் தானென்
றுரைத்திலரே. 196.

வருந்தோழிக் கருமைநினைந்து தலைவிவருந்தல்

மஞ்சுங் கடகரி யுந்தெரி யாமல்
வயவரிதன்
னெஞ்சுங் கலையுங் கருங்கங்குல் வாய்நெடும்
போர்மறலி
யஞ்சுஞ் சரணத்த ராலவா யி
லரும்புமதிப்
பிஞ்சும் பொருறுத லாயன்ப ரோவரும்
பேரெமக்கே. 197.

தலைவி இரவுக்குறி நேர்தல்

மறியாளர் செங்கை மழுவாளர் சொக்கர்
மதுரைவெற்பர்
குறியா நெடுங்கங்குல் வந்துநின் றூலவர்
கொள்கையொன்று
மறியாக் கனவில்லை நீயறி யாத
வறிவுமில்லைச்
சிறியா ளொருதமி யேனைங் கேயென்கொல்
செப்புவதே. 198.

தலைவி இரவிற்குறி நேர்ந்தமை தோழி தலைவற்
குரைத்தல்

கலைக்கோ டிலவுங் கடம்பா டவியர்
கனகவெற்பி
விலைக்கோடு சீறு மிளமுலை யாளென
ரென்றதந்திப்
பலைக்கோடு பாயும் புயகே சரியெனைப்
ப[…]ர்த்துரைத்த
துலைக்கோல வாய்மை மறுத்துள தோவொன்று
சொல்லுவதே. 199.

இரவிற் குறியிடம் வினாதல்

மற்குன் றடுபுயத் தார்மது ரேசர்
வரையிலிரு
பொற்குன் றடுமுலைப் பூவைநல் லாய்விண்
புகுந்தடங்காக்
கற்குன் றருகுங்கள் சீறூர் வருகருங்
கங்குல்வந்து
நிற்கின்ற சூழலில் நீர்விளை யாடு
நிலையதுவே. 200.

**இரவிற் குறியிடங் கூறல்**

மண்ணும் புனலு மறுமுடி மாறர்
மதுரைவெற்பி
லெண்ணும் பிரிவோ டிரவுநின் றூடிட
மெக்கலையு
நண்ணுங் குருசி லருகுசென் றூர்தனி
நன்னெஞ்சமுங்
கண்ணுங் கவரும் புதுமலர்ச் சோலையுங்
கைதையுமே. 201.

**தாய் துயிலறிதல்**

வல்லையஞ் சாத முலையுமை பாகர்
மதுரையிலோ
ரெல்லையஞ் சாத களிமத யானை
யிருளிடையே
கொல்லையஞ் சாரல் கடந்தணங் கேநங்
குரம்பைமுன்றில்
முல்லையஞ் சாது பரிந்திடி போல
முழங்கிநின்றே. 202.

**தோழி தலைவன் வந்தமை கூறல்**

தொங்கற் சடாடவி யார்மது ராபுரிச்
சொக்கர்வெற்பி
லங்கட் கயலம் புயத்திரு வேவண்
டலையொளிவாய்
வங்கக் கடலும் வளர்தாரு வுங்கண்
வளருமிந்தக்
கங்குற் பொழுது துயிலெழுந் தாலுங்
களிமயிலே. 203.

**இரவிற் குறியிடத்துத் தலைவியைக் கொண்டு சேறல்**

காமே தருதடஞ் சூழ்கடம் பாடவிக்
காவலர்நாட்
டாமே யினியணங் கேயின்ப வாரிநம்
மன்பர்கங்குல்
தாமே வரவு மவற்கெதி ரேயிளந்
தண்டலைவாய்
காமே செலவுந் தவந்தந்த வாவிற்றை
நாணமக்கே. 204.

**குறியிடத்து நீங்கல்**

கொத்தலர் கொன்றையந் தார்ச்சொக்க நாயகர்
கூடல்வெற்பிற்
புத்தலர் கொய்து வருவலின் னேயிமைப்
போதளவுந்
தொத்தலர் மாலைச் சுரிகுழ லாயுன்
றுணைமுலைமே
னித்தல மாலை நிலவினில் லாபுன்னை
நீழலிலே. 205.

**குறியேதிர்ப்பாடு**

திரிபுரத் தாடற் றிருவால வாயர்
சிலம்பி லின்பஞ்
சொரிபுரத் தாம வனமுலை யீர்கங்குல்
தோடவிழ்க்கு
மரிபுரத் தாமரை யோவரை யாமத்
ணுவிதந்த
பரிபுரத் தாமரை யோவினிப் பாவி
பணிவதுவே. 206.

**கலந்துழி மகிழ்தல்**

மல்லுங் குழைபுயத் தார்மது ரேசர்
வரையில் வல்லிப்
புல்லும் புளகமு மானன சோலையும்
புல்லப்புல்லக்
கல்லுங் குழையு நயமுமெய் யாத
கலவியுநான்
சொல்லுந் தரமல்ல வேயெளி தோவது
சொல்லுதற்கே. 207.

**நலம் பாராட்டல்**

மண்ணிற் பரக்கும் புகழ்மது ரேசர்
வரையினகை
வெண்ணித் திலத்தில் மகிழ்ந்தன மேயின்ப
வீடளிக்கும்
பண்ணிற் கனிந்த குதலையஞ் சீறடிப்
பாவைகடைக்
கண்ணிற் கிடக்கு மொருகோடி நேயமுங்
காதலுமே. 208.

**விடுத்தல்**

துறக்குந் தகைஞர் தொழுமது ராபுரி
சொக்கர்வெற்பின்
மறக்கும் படியல்ல நீதந்த காதல்
மருங்கிறக்கும்
நிறக்குங் குமமுலை யீர்தலை நாளையில்
நீர்பிறந்த
சிறக்குஞ் சரோருகந் தேடுமுன் னேசெல்லுஞ்
செல்லுமின்றே. 209.

**வரைவுகடாதல்**

புனங்காவல்போனது கங்குலென் றூலெங்கள்
பொன்னகர்யாய்
மனங்காவல் போலல்ல வேயையர் காவல்
வணங்கலர்பாற்
சினங்காலும் வேற்கைத் திருவால வாயர்
சிலம்பமற்றுன்
றனங்காவல் கொண்டிவள் போற்றனங் காவல்
சமையினன்றே. 210.

**ஊர்புகு குறிகூற் றேன்றல்**

சிங்க முழக்குஞ் சிலநெறி நீநகர்
சென்றுபுக்கா
சங்க முழக்குந் தடஞ்சிலம் பாசல
ராசிபுக்க
வங்க முழக்கைத் திருமது ரேசர்
வரையிலெங்கள்
அங்க முழக்கு மிடர்க்கது காணின்
றருமருந்தே. 211.

**அவனளி நிறத்தல்**

காதள வானகண் ணுயவர் பால்வைத்த
காதனெடும்
போதள வாக விரித்துரைத் தாலும்
பொருப்பரசின்
சூதள வாமுலை தோய்வா ரழகிய
சொக்கர்வெற்பி
லேதள வாமறி யேனறி யேனிதற்
கென்சொல்வதே. 212

**இரவிற்குறி முற்றும்.**



# சூளாமணி

[218-வது பக்கத் தொடர்ச்சி]

தித்திக்கும் செங்கரும்பினுள்ளே அதன் சாறனைத்தும் அமிழ்தமாம்படி, அமிழ்தத்தை ஊட்டி, அதன் உள்ளுள்ள இடைவெளி யெல்லாம் தேன் பொசிந்து நிற்கத் தேனையும் கலந்து, பின்னர், இங்ஙனம் மூன்றாக நின்று ஒன்றாகி இயைந்தவற்றை ஒருசேர ஒன்றாகப் பிழிந்ததும் அவற்றின் உயிர்நிலையாய் ஒளிரும் சாறேபோல இனியது அம்மகளிர் வாய்ச்சொல். அவ் வினிய சொல், கேட்குந்தோறும், தன் காதலனுடைய கேள்வியிற் பழகிய காதிற்குந் தீங்கரும்பே போல மிகமிக இனியதாகி, கேட்ட அத்தலைவனைத் தேனேபோல நின்றநிலை மறக்கச்செய்து தன் வழிநிறுத்தி இன்பக்களிப்பிலே மகிழுமாறு செய்து, அவனுள்ளத்தே அமிழ்தம் போலச் சாவா நிலைமை பெற்று, என்றென்றும், தன்னை எண்ணி இன்பநிலையடையுமாறு அவனுயிரையும் வளர்ப்பதாய் விளங்கி அவ்வகையில் அவன் காதுக்கும், உள்ளத்துக்கும் உயிருக்கும் இனிப்பதாகின்றது.

எந்தநிலையில் இத்தகைய வோர் இன்பத்தை ஊட்டுகின்றன அத்தகைய சொற்கள்? எதிர்பாராத இடத்தேயேனும் மறம்முதலியகுணங்களால் குன்றெனவோங்கிப் பரப்பால்பெருங்கடல்என்னநின்ற படைநடுவே, "நான் ஆண்மகன்" என்று கருதுதல் முதலான தன்னைப்பற்றிய எண்ணங்கள் சிறிதுமின்றி அரசர்க்குரிய பண்புகளனைத்தும் ஒருசேர உருப்பெற்றது போன்று நின்று, அவற்றின் தொழிற்பாட்டையே எண்ணி நிற்கின்றான் அப்பயாபதி. அவ்வாறு மறநிலையினின்ற நிலையிலும், அவனை உயரத்தூக்கிச் சென்று இன்ப நிலையில் நிறுத்திக் காதலூட்டுகின்றன அவ்வினிய சொற்கள். படையொடும் விளங்குகின்றவனைப் பரிவு வடிவாம் அன்புலகிற் புகச்செய்கின்ற மறைமொழிகளே அவ்வினிய சொற்கள். அவனுடைய அன்பாட்சியின் நுட்பம் இப்போது வெளியாகிறது. இதுபற்றியன்றே இவர்களோடு இவன் கூடி வாழ்வதையும் நகரப்படலத்திலேயே கூறவேண்டிய தாயிற்று. வென்றோர் தோற்றோராவதும் தோற்றோர் வென்றோராவதுமாம் ஊடலுலக அன்புநெறிவழியே பகையைக் கடந்தடக்கும்முறையை அவனுக்குக் கற்பித்தவை அவ்வினியசொற்களேயாம். ஓங்கிப்பரந்தபடைநடுவேநின்ற அரசன், இவர்களுடைய இனிய சொற்களை எண்ணி எண்ணி, இன்ப அன்பு உருவனாய் மறநெறிநீங்கி அறநெறி புகுந்து, அரண்மனை நுழைந்ததும் அச் சொற்கள் காதல்நோயை மூட்டுதலின் அவர்கள் எதிரே வருகின்றான். அவனைக்கண்டு வீங்கிப்பருத்துஓங்கிப் பெருத்து அவன் காதனோய் தீர அவனைத் தழுவித் தம்முட்படுத்தி அவனுக்கு அடங்கிக் குவிந்து விளங்கும் கொங்கையாற் சிறந்த மிகாபதி என்பவள் இவனுடைய முதன்மனைவி. பிறரால் தடுத்தற்கரிதாய் ஆக்கலும் அழித்தலும் வல்ல கற்பின் வலிமிக்கவளாய்க் கற்பினாலேயே வானுலகைவாழ்வித்து வானுலகசெல்வத்திற் கறிகுறியாகி அச்செல்வமே உருவெடுத்தாற் போல விளங்கும் சசியே போலச் சசி என்ற இளைய மனைவி இவ் வரசசெல்வியாய் இவனைத் தன் கற்பால் வாழ்வித்துவருகின்றாள்.

"மகளிரின் மாநிறக் கவினை கொழுந்து விட்டது ஈது" என்றும், "தனையடைந்தார்துயரத்தைஅடியோடு நீக்குவது ஈது" எனவும் பொருள்பட "மாங்கொழுந்து" என்றும் "அசோகம்" என்றும்சிறப்பித்துச்சொல்லப்படுவதற்குஇணங்கவே, தளிர்விட்ட நிலையிலேயே பூத்தாற்போலப் பொலியும்அம்மாவும் அசோகமும் இளவேனிற்காலத்திலே அப் பூந்தண் காவினிடையே பொலிவுபெற்று விளங்கி அக்காலத்தின் சிறந்த அறிகுறிகளாகி நின்று ஆங்கே எழுந்துள்ள மற்ற மரங்களையும் தம் சார்பால் அழகுபெறும்படி அலர்விப்பனவாம். ('அலரும்-விவ்விகுதிதொக்கது' 'குடிபொன்றி' என்றுகுறளிற்கூறியதுபோலவும், "மருவிடும்" என்று சித்தியாரில் கூறியதுபோலவும்) புனைதலாற்பொலிந்த குழையையணிந்த மற்றையமகளிரது பொற்பணிகள் அவர்களுறுப்பினும்வேறாயவை எனத்தோன்ற, இவ்விரு பெண்ணரசிகளோ, பொன்மலரே பூத்த மணிக்கொடியேபோல விளங்குதலினால், அவ்வேற்றுமையின்றி, தம் உறுப்பெல்லாம் அணியெனப் பொலிய, அணிகளும், உறுப்புக்களோடே ஒருங்கு இயைந்து தோன்ற அழகேயாய் விளங்கினர். தளிர்த்தநிலையில் பூத்தது போல உடலழகே அணியாய் நின்றபடி ஈது. பொன்மலரொடு மணிக்கொடியும் நாற்றமுடையவாயினாற்போல, இவ் வுயர்குடியிற் பிறந்த கற்பரசியரது கூந்தற் கற்றைகள் இனிய நறுமணமுடையவாய் விளங்குகின்றன. இளவேனிலைக் காட்டுவனவாய் மாவும் அசோகமும் இனிது தளிர்த்தவுடன், மற்றைய மரங்கள் மனமகிழ்ந்து மலர்வதுபோலப் பிறபெண்கள் இவ்விருவரையும் ஒற்றித்திணைத்துப் பாராட்டித் தம்நெற்றியினிடையே அழகுபெறவைத்த கலவைப்பொட்டென இவர்களைச்சிறப்பித்துத் தம்மைத்தாம் புனைந்துகொண்டதுபோலவே செருக்கி மகிழ்கின்றனர்; அதனால் தாமும் அழகுபெற்று விளங்குகின்றனர்.

மக்களிற் பெரிய இவ்வரசனுடைய மறமோங்கும் நெஞ்சும் அறமோங்க உருகி அன்புவடிவாதற்குக் கருவியான பெண்மை என்னும் கட்புலனாவதோர் அமைதித் தன்மையின் தனிப்பெருஞ் சிறப்பு இவர்களிடமே உண்டு. அரசனை யிவர்களும் இவர்கள் அரசனையும் பேணி, நாள்தோறும் மருவி வாழ்ந்து வந்தாலும் இவர்கள் பேசும்பேச்சுக்கள் பழையவாய் ஒழியாது, பேசுந்தோறும் புதிய புதியவாய் அவ்வரசனுக்கு இன்பூட்டி அறிவை விளக்குகின்றன "எழுத்து வடிவு பெற்றுத் தோன்றும் இளைய வார்த்தை. மழலைஅக்காலத்தும்கூறுப" என்று "மெய்பெறாஎழுத்துயிர்க்கும்மழலை" என்றதிருத்தக்கதேவரது சொற்றொடர்க்கு நச்சினார்க்கினியர் பொருள் கூறுதல் காண்க. மழலை என்பது அச்சொல்லின் பேச்சழகையும் இன்னிசையையும் ஒலிக்கும் முறையையும் காட்டி நிற்கும். தன் கருத்தைச் செவ்வனே கிளத்தலின் மழலை என்றொழியாது கிளவி என்றும் விதந்துகூறுகின்றார். சொல்லழகும் பொருள்படும் திறனும் இவ்வாறாகப் பொருளழகும் கூறநின்றமையின் அவ்வழகினைச் சுட்ட "அம்" என்ற அடை கொடுத்து இம் முத்திறச் செவ்வியையும் "மழலையங்கிளவி" எனச் சிறப்பித்துக் கூறுகின்றார் [illegible]

இவர்களிடந்தான் உண்டு. இவ்வழகாலும் இப்பேச்சாலும் அவனுக்கு உயிர்க்குயிராய் இன்பமாகின்றனர். முன்னே, இப் பெண்மணிகளுக்கு ஒப்பாகாது விலக்கப்பட்ட திருமகளும் அறிவை வளர்க்கும் கல்விச்செல்வியும் இருவராயிருந்தும் இவ்வரசனுடைய உள்ளத்தே ஒருங்கியைந்து நிற்றல்போல இவ்விரு மனைவியரும் ஒருங்கியைந்து பெண்மையாலும்கிளவியாலும் ஒருவரேயாய் அவனுக்கு இன்பவடிவாகி விளங்குகின்றனர். ஒருவனுக் கொருத்தி என்பதே முறை என்பது உள்ளத்தை வாட்டுதலின் தோலா மொழித்தேவர் இவ்வாறு கூறுவாராயினர்.

மன்னவனுடைய மூச்சு வலமூக்கினும் இடமூக்கினும் போய்வந்து புழங்குவதுபோல, இவ்விருமகளிரும் அவனுடைய ஆவியே யாகி விளங்குகின்றனர். இதனால்மன்னவன், மன்னவனாய் நிலைபெறுதல்இவர்களாலே எனவாயிற்று. மகளிர்தம் இன்பவடிவாம் உயிர் இவனேயாகின்றான். எல்லார்க்கும் உயிராகநிற்கின்ற இறைமகனன்றோ இவன். முன்னே, இவர்களைப் படைத்த படைப்புக்கடவுள் அழகு மொய்க்கும் மலர்க்கணைகளானே, இவர்களை, ஒருவர்மேல் ஒருவர் உள்ளம் ஓடச் சேர்த்துவைத்த வியப்பு என்னே என்னே ?

மற்றொரு வியப்பிருந்தபடி ஈது. தம்மிடத்தேயே, அழகு விளங்கவும் நறுமணம் நாறவும் தம்முறப்பாகவே பூத்துநின்று தேன்பெருகும்பூங்கொத்தைப் பொறுக்க மாட்டாது மென்மையால்,ஒசியும்கற்பகக் கொழுந்தும், அக்கற்பகத்தைச் சுற்றி நின்றொளிரும் காமவல்லி என்னும்அழகே வடிவான கொடியும்போன்று தம் முடலுறுப்புக்களையும் தாங்குவதற்கு ஆற்றாமல் ஒசியும் அத்துணையமெல்லியலார் இவ்விருவர். மன்னவனே, மற்போர்புரிய எவரேனும் இருப்பாராயின்வருக எனத் தினவுகொண்டு அகன்ற மார்பினையுடைய அத்துணைவலியான். அத்தகைய மெல்லியார் இத்தகைய வலியானைத் தம் மனத்திடையே உட்கொண்டு கட்டி வைத்துள்ளார்கள். படைகொண்டு அரசனுதலின்றிச் சொல்வன்மையால் தன்கொள்கையை உலகிற்கு எடுத்துக்கூறி அவர்களும் அன்னதற்குடன்பட்டு ஒழுகிவர அறிவாலே ஆண்டுவருகின்ற இவ்வரசன், தன் கருத்தைச் சொற்களால் உலகினர் மனங்கொள்ள எடுத்துக்கூறி உலகத்தைக் காத்துவருகின்றான். அவனுடைய காக்குந்தொழில் புறப்பொருட்டொழிலாய்ப் புறத்தே நடப்ப, அதிலே, பெண்வழிச்சேறல் என்னும் பழி அவனிடம் சேராதபடிவிட்டு, தம் மனத்தகத்தே தாம் சிறைவைத்தஅவனுடைய அகவொழுக்கத்தை எல்லாம் தம் வழியே நடத்திக்கொள்கின்றனர் இப்பெண்மணிகள். பெண்களோ இருவர், அவர்களிடையே நிலைபெற்ற அரசனோ ஒருவன்; அப்பெண்கள் அவ்வப்போது அங்கங்கே விரும்பியவை யனைத்தையும் இவனும் விரும்புகின்றான். அவ்வாறு இவர்கள் மூவரும் ஒருயிர் என நிற்கின்றனர். இவ்வன் பொழுக்கத்தால், மற்றைய உயிர்களிடையும் அருள்பெருகி நிற்கின்றான். தவ ஒழுக்கம் விளங்குவதை இவரும் சுட்டுகின்றார். கையிலே திருவாழிப்படைதாங்கிய சக்கரனும்திருமால், சிவந்து கயல்போற் பிறழ்ந்து தமக்கவனை அடிமையாக்கிக்கொள்ளும் மதர்த்த ஒளிபொருந்திய கண்களாலழகிய சட்வுட்டாயராம் திருமகளும் பூமகளும் தனித்தனி தழுவ அவ்வவர்களிடை அவர்களுக்கேற்றபடி வடிவுகொண்டு விளங்கி உலகையும் காத்தல் போல் இவனும் இவர்களிடை விளங்குகிறான்.

உலகைச் சுற்றியகடலை எல்லையாகக் கொண்ட இந்நிலவரைப் பரப்பனைத்தையும் ஒன்றும்விடாது ஒவ்வோர் மூலை முடுக்கினும், தன்னருள் பரவ, எல்லோர்க்கும் ஒரேபடித்தாக நிழலைச் செய்யும்ஆற்றலிற்சிறந்த ஒற்றை வெண்குடை நீழலில் உலகமானது கவலையற்றுக் கண்வளரும்படியாக அவற்றைக் காத்துநின்று,தான் அவர்கள் இன்பமாய்த் துன்பமின்றி இருக்கும்போது அற்றம் பார்த்து, அவ்வகையில் வெற்றிபெற்ற மன்னன், அவ்வெற்றியினும் நீண்ட கண்ணால் தன்னைக்கட்டிய பெண்களின் கொங்கைக்குவடேறிநின்று, உயரநின்று காக்கும் காவலாளரைப்போல விளங்கி,அங்கிருந்துப் இன்பத்தே மூழ்கிக்கிடக்கின்றான். இவ்வாறு மூழ்கிக்கிடத்தலால் அவனுடைய அரசசெல்வம், அவனுக்கு, இவ்வாறு அறம்பொருளின் பத்திரட்சியாய் வீட்டுலக நெறியுமாகி விளங்குகிறது. (மூழ்கி=மழைபெய்து குளம் நிரம்பியது என்பது போலக் காரணகாரியப் பொருட்டில் வந்தது).

தோலாமொழித்தேவர் புனைந்துரைத்த நகரம் ஒருவகையால் நோக்குமிடத்து மற்றைய நகரங்களினும் தலைசிறந்து விளங்குகிறது. அகழும் மதிலும் மாடமும் புறக்காவும் என்று நகர்க்கழகெனக்கூறப்படும் இவற்றை மிகச் சுருக்கமாகப் புனைந்துரைக்கின்றார். இவற்றைவிட மக்களே நகரமாக இவர் கண்ணெதிரே விளங்குகின்றனர். ஆடலும் பாடலுமாய்ப் பெண்கள் பொன்னிடையும் மணியிடையும் அழகுபெற்று, மலரோடும் வண்டோடும் அன்னத்தோடும் இயைபுகொண்டு இயற்கை யன்னையின் செல்வப் புதல்வியராக விளங்குதலைச் சுட்டுகின்றார். மகளிர்கள் ஆடவரோடு கூடியும் ஊடியும் நிற்பதனையும் அந்நிலையில் அறம்வளரவளர இன்பம்வளர நிற்பதனையும் விளக்குகின்றார். இந்நகரம் நகரமாவது உயிர்க்குயிரான அரசனாலேயே என்பதை உட்கொண்டு, அவ்வரசனுடைய அன்பாட்சியை விரித்துரைக்கின்றார். அவனுழை நின்று அவ்வன்பைப்பெருக்கி அவனை அருள்வழியில் நிலைநிறுத்திய் அவன் இரு மனைவியரையும் ஒருவர் எனவே இயைத்துப்பாடி முடிக்கின்றார். பரத்தையர் முதலியோரைக் கூறுமையும் அரசியலை நாட்டின் ஒருறுப்பாம் நகரத்திலேயே அடக்கிக் கூறியமையும் நாம் குறித்துவைக்கத்தக்கனவேயாம். அழகும் முத்தமிழும், அறமும், பொருளும், இன்பமும், அன்பும் அருளும் அறிவும் வடிவுகொண்டதே நகரமாம் என்பது தேவர் துணிபு.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) I.D.L. G1, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மடச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைகோகந்திருமணைக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
[illegible]
ஜ்வரேக் சகலவித ஜ்வரங்களுக்கும்
[illegible]
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]



# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## ஸ்ரீரங்கநாதஸ்வாமி ஸ்தோத்திரங்கள்

[222-வது பக்கத் தொடர்ச்சி]

4. இராகம்—தேவகாந்தாரி] [தாளம்—ஆதி.

**பல்லவி**

விநராதா காமனவி........................................................(வி)

**அநுபல்லவி**

கநகாங்க காவேரி ரங்க ஸ்ரீ—காந்த காந்தலெல்ல காமிஞ்சி பிலசிதே..........(வி)

**சரணங்கள்**

1. தேஜிநெக்கி பாக தெருவுந ராக—ராஜ ஸதுலு ஜூசி ரம்மநி பிலசிதே........(வி)
2. பாக தேயவை போக ரங்க ஸ்ரீ—த்யாகராஜநுத தருணுலு பிலசிதே..........(வி)

### பொருள்

காமநவி விநராதா - என்னுடையவேண்டுகோளுக்குச் செவிசாய்க்கக் கூடாதா ?

கனகாங்க - பொன்போலும் திருமேனி ஸௌந்தர்யத்தை உடையவனே! காவேரிரங்க - உபயகாவேரி மத்தியில் பள்ளிகொண்ட ரங்கநாதனே! ஸ்ரீகாந்த - திருமாமகள் கொழுநனே! காந்தலு எல்லன் - எல்லா ஸ்திரீகளும், காமிஞ்சி - உன்பேரில் பிரேமை வைத்து, பிலசிதே - கூப்பிட்டால், விநராதா - ஏனென்று கேட்கக் கூடாதா?

தேஜிநெக்கி - குதிரைவாகனத்தின்மீதேறி, பாக-அழகாக, தெருவுந ராக - வீதிவழியே பவனி வருகையில், ராஜ ஸதுலு ஜூசி - ராஜஸ்திரீகள் பார்த்து, ரம்மனி பிலசிதே - வா என்று அழைத்தால், விநராதா - ஏனென்று கேட்கக் கூடாதா?

டாகதேய-நான்செய்த புண்ணியத்தின் பயனானவனே! வைபோக ரங்க - எல்லா வைபவங்களும் பொருந்திய ரங்கநாதனே! ஸ்ரீத்யாகராஜநுத - ஸ்ரீதியாகராஜனால் கொண்டாடப் பட்டவனே! தருணுலுபிலசிதே-யுவதிகள் உன்னை அழைத்தால், விநராதா - ஏனென்று கேட்கக் கூடாதா ?

### குறிப்பு

இக் கீர்த்தனையும் ஸ்ரீரங்கநாதன் குதிரைவாகன சேவையி னழகி லீடுபட்டுப் பாடியதாம். இது சிருங்காரம் அமைந்ததாக விளங்குகின்றது.

ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமியைப் பற்றிய ஸ்தோத்ரமான "ஸ்வாமிகிஸரி" என்ற கீர்த்தனத்தின் குறிப்பில் தேவகாந்தாரி ராகலக்ஷணத்தைக் கண்டுகொள்க.

## ஸ்வர ஸாஹித்யம்

### ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[குறிப்பு:—இக்கீர்த்தனையை மத்ய காலத்திற் பாட வேண்டும்]

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ; ; ; * பா தா பா ; மக | ரீ ; ; ரீ | மா ; பா ; \|\| |
| ; ; ; * வி ந ரா ; த. | நா ; ; ம | ந ; வி ; \|\| |
| ; ; ; * பா தா பா ; மக | ரீ ; ; ரீ | ம ப தா ; தஸ் \|\| |
| ; ; ; * வி ந ரா ; த. | நா ; ; ம | ந . . ; வி . \|\| |
| ரிஸ் தா ; * பா தா பா ; மக | ரீ ; ; ரீ | ம ப தா ; தஸ் \|\| |
| . . . ; * வி ந ரா ; த. | நா ; ; ம | ந . . ; வி . \|\| |
| ரிக் ரீ ; * ஸ் நி தா பா ; மக | ரீ ; ;—ரீ | ரீ ; ப ம க ரீ \|\| |
| . . . ; * வி . ந ரா ; த. | நா ; ;—ம | ந ; வி . . . \|\| |
| ; ; ; * ஸா | | |
| ; ; ; * . | | |

**அநுபல்லவி**

| | | |
|---|---|---|
| ; ; ; * தா தா ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; ;—ரீ | ஸ்ா தா ; . தா \|\| |
| ; ; ; * க ன காங் ; க | கா ; ;—வே | ரி ரங் ; க \|\| |
| நிதபா ; * தா தா ஸ்ா ; ஸ்ா | ஸ்ா ; ;—ரீ | ஸ்ா—ஸ் நி தா தா \|\| |
| ஸ்ரீ . . ; * கன காங் ; க | கா ; ;—வே | ரி —ரங் . . க \|\| |
| நிதநிதபம* தா தா த ஸ் ரீ ரீ | ரீ ; ;—ரீ | ம் க் ரீ — ஸ்ா ஸ்ா \|\| |
| ஸ்ரீ . . . * கனகாங் . . க | கா ; ;—வே | ரி . . — ரங் க \|\| |
| நிதநித பம* ஸ்ா ஸ்ா ஸ் நிதா தா | ப ம பா;—த ஸ் | தா பா—ம க ரீ \|\| |
| ஸ்ரீ . . . . * காந்த காந் . . த | லெல்ல;—கா . | மிஞ் சி —பி . ல \|\| |

ம ப தா தா *
சி . . தே . * (விநராதா)

சரணங்களை அநுபல்லவியைப்போலப் பாடவேண்டும்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

நாஷனல் இன்ஷுயெரன்ஸ் கம்பனி:—1906 வருடத்தில் ஆரம்பமாகி வருடா வருடம் விருத்தியடைந்து வருகிற இந்தக்கம்பனியின் 1933-வது வருடத்திய அறிக்கை வரப்பெற்றோம். இந்தக் கம்பனியின் சொத்துக்கள் ஒன்றும் அடைமானத்திற்கு உட்படுத்தப்படாமலிருப்பது கவனிக்கத் தக்கது. அதனோடு, வட்டிவிகிதம்இத்துணை குறைந்திருக்கின்றஇக்காலத்திலும் மூன்று லக்ஷம் ரூபாய் இலாபம் வந்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. 1932-வது ஆண்டிலும் 1933 ஆண்டில் 22 லக்ஷம் ரூபாய்க்குமேல் இந்தக் கம்பனியின் இருப்பு அதிகரித்திருக்கின்றது.

* * *

3000 ஆண்டுக்கு முந்திய பவுண்டன் பேனா:—தென்அமெரிக்காவில் மெக்சிகோ நாட்டிற்கு அருகே ஓர் ஆற்றுக் கருகே பழைய கட்டடங்களைத் தோண்டிய பொழுது மான்கொம்பால் செய்த ஒரு பவுண்டென்பேனா அகப்பட்டதாம் அது மூவாயிரம் வருஷத்திற்கு முந்தியதா யிருக்கலாமென்று தெரிகிறது. பேனாவில் ஒரு மர எண்ணெயை ஊற்றிவிட்டு நுனியில் மாங்கனிஸ் உலகத்தை வைத்து விடுகிறார்கள். மாங்கனிஸ் வழியாக வரும் எண்ணெயைக் கொண்டு எழுதினால் அது கருப்பா யிருக்கிறதாம்.

* * *

கலாநிலயத் தமிழ் வகுப்பு:—சென்னையில் 1933-வது ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகி நடந்து வந்த தமிழ் வகுப்புக்கள் இவ்வாண்டு ஜூலை மாதத்துடன் பாடங்கள் முற்றி முடிவடையும். அதன் பின், புதிது சேர்ந்து கற்க விரும்புகின்றவர்களுக்கு மீண்டும் ஓர் வகுப்பு ஆரம்பித்து, சென்னை எஸ்பிளனேட் Y. M. C. A. கட்டிடத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும், மாலை 5-30 முதல் 6-15 வரையில் நடைபெறும். சேர விரும்புவோர் தம் கருத்தை இக்கலாநிலயத்தின் ஆசிரியருக்கு முன்னரே தெரிவித்து வைத்திருத்தல் நலம்.

* * *

இராமாயணப் புகழ்:—மதுரை, உதவி இன்கம் டாக்ஸ் ஆபிஸரா யிருக்கும் ஸ்ரீமான் A. R கணபதி ஐயர், இராமாயண நிகழ்ச்சிகளை 32, பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களில் பாடியிருக்கின்ற சிறு புத்தகம் வரப்பெற்று மகிழ்கின்றோம். "அமரர்க்கமுது துய்க்கவிடு மெய்ப்புகழினை வற்றுதலிலாத பத முய்த்தடியினீழல் பெறவைத்த அருளாளன்" என வாலிவதையைக் குறிப்பது போன்ற அழகிய இடங்கள் பல இந்நூலில் உள. விலை 2. அணா.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

உயர்ந்த ஜாதி
பழமரக் கன்றுகள்
முறைப்படி வளர்க்கப்படுவன
பழமரங்கள் வைத்து வளர்ப்பதால்
இலாபம்.
அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும்.
ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.
விலையும் நயம்!
ஜாதியும் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!
தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.
உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.
நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்ளார்.
D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.
D. T. DESAI & Co., 17, Cross Road, Malleswaram, BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனாம்! இனாம்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)